# பாதுகாவலன்
PATHUKAVALAN


இவ்வார விநியோகம்

| | |
|---|---|
| பாஷையூர் பங்கு | 311 |
| யாழ் சென் ஜேம்ஸ் | 300 |
| கரம்பொன் பங்கு | 262 |
| அச்சுவேலிப் பங்கு | 260 |
| பருத்தித்துறை பங்கு | 260 |
| இளவாலைப் பங்கு | 259 |
| யாழ். பேராலயம் | 250 |
| சில்லாலைப் பங்கு | 225 |
| மன்னார் பேராலயம் | 192 |
| பாண்டியன் தாழ்வு | 175 |
| மண்டைதீவு பங்கு | 173 |
| வங்காலை பங்கு | 170 |


மலர்: 115 இதழ் : 25 30-6-1989 (யூன் 30 — யூலை 07) (பக்க. 10) ரூபா 1-50 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு


பிலிப்பைன்ஸ்: கிறிஸ்துவின் ஐக்கிய திருச்சபை என்ற புரட்டஸ்தாந்து திருச்சபை ஆலயத்தில் வழிபாட்டிலீடுபட்ட குருவும் மக்களும் கொலை! பைபிள் தீக்கிரை! ஆலயம் முற்றாகச் சேதம்

# கம்யூனிஸ்ட் கெரில்லா தாக்குதலால்

# பாதிரியாரும் 40 மக்களும் பலி

**சென்ற ஞாயிற்றுக்கிழமை [ஜூன் 25] பிலிப்பைன்ஸ் தேவாலயத்தில் கம்யூனிஸ்ட் கெரில்லாக்கள் தாக்குதலை மேற்கொண்டதால் கிறிஸ்தவ பாதிரியார் சிரச்தேசம் செய்யப்பட்டார். விழிப்புக்குழுவினர் அங்கு வந்த சுமார் 100 கெரில்லாக்களை தமது துப்பாக்கிகளின் உதவியுடன் விரட்ட முற்பட்ட போதிலும் அங்கிருந்த 40 பேரும் பலியானார்கள்.**

மணிலாவில் தென்மேற்கு பகுதியிலுள்ள டாவாஓ டெல்சூர் என்ற மாகாணத்தில் றேஜே என்னும் மலைப்பிரதேச கிராமமொன்றில் புரட்டஸ்தாந்து மத தேவாலயமொன்றில் வழிபாடு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அங்குவந்த சுமார் 100கொரில்லாக்கள் பாதிரியாரை சிரச்சேதம் செய்த பின் வழிபாட்டிலீடுபட்டவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

மேற்படி கிராமம் கம்யூனிஸ்ட் கொரில்லாக்களுக்கு எதிரானதென்றும் கொல்லப்பட்ட தேவாலய பாதிரியாரின் சகோதரர் அவர்களுக்கு எதிராக செயற்பட்டு வந்ததாகவும் கூறப்படுகிறது.

அவர்கள் கொரில்லாக்களுக்கு எதிராக விழிப்புக் குழுக்களை அமைத்து கிளர்ச்சியாளருக்கு தாம் பணமோ, உணவோ கொடுப்பதை நிறுத்தியிருந்தனர்.

அப்டி ஆயாப் (Abdi Ayap) என்ற பாதிரியார் சிரச்சேதம் செய்யப்பட்டார். அவரது சகோதரரும் கொல்லப்பட்டார். பதினைந்து நிமிடங்கள் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அங்கிருந்த 40 பேரும் கொல்லப்பட்டனர்.

குதிரைகளில் சென்ற கொரில்லாக்கள் தேவாலயத்தைச் சேதமாக்கியதோடு, கிராமத்திலிருந்த பெறுமதியான பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றதாக பொலிசார் தெரிவித்தனர்.

## கண்டி மறைவட்டத்திற்கு ஒரு புதிய குரு

இறைவனின் பணியாளராக தேர்ந்து கொள்ளப்பட்ட அருள் செல்வன் அன்ரனி குருஸ் சேவியர், நிகழும் 1989-ம் ஆண்டு ஆவணித்திங்கள் 5-ம் நாள் சனிக்கிழமை காலை 10 மணிக்கு கண்டி புனித அந்தோனியார் பேராலயத்தில் பேரருட்திரு. கலாநிதி ஜோசப் வியானி பெர்ணண்டோ ஆண்டகை அவர்களால் குருவாகத் திருநிலைப்படுத்தப்படுவார்.



இவர் நுவரெலியாவைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. சந்தனம் சவரிமுத்துவினதும், திருமதி வியாகுலமேரி சவரிமுத்துவினதும் புதல்வராவார், இவர் தமது ஆரம்பக்கல்வியை நுவரெலியா நல்லிணைப் பாற்றி கன்னியர் மடத்திலும், தொடர்ந்து புனித சவேரியார் கல்லூரியிலும் கற்றூர்.


(தொடர்ச்சி 8ம் பக்கம்)


## திருநிலைப்படுத்தப்படவுள்ளார்

இறை மனித உறவை வளர்த்து உறுதிசெய்யும் பணிக்கென, அருள்சகோதரன்



நிமல் ஜோர்ஜ் பர்ணந்து அவர்கள் எதிர்வரும் 22-7-1989 அன்று பேராயர் கலாநிதி நீக்கலஸ் மார்க்கஸ் பர்ணந்து அவர்களால் கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்திலே, குருவாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

இவர் நீர்கொழும்பு குடாப்பாடு லூயிஸ் பிளேஸில் வதியும் அல்பேட் பர்ணந்து, அக்னஸ் பீரிஸ் தம்பதியின் நான்காவது புதல்வராவார்.

இவர் தமது ஆரம்பக்கல்வியைக் கடற்கரைத் தெரு சிங்களப் பாடசாலையிலும், நீர்கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரியிலும் பெற்றூர். பின் இறை அழைப்பின் குரலுக்குச் செவிமடுத்து 15-1-1976 அன்று பொரளை புனித அலோசியஸ் குருமடத்தில் சேர்ந்தார். பம்பலப்பிட்டி சென். பீற்றர்ஸ் கல்லூரியில் உயிரியல் விஞ்ஞானம் கற்று


(8ஆம் பக்கம் பார்க்க)


## வேளாங்கண்ணியில் உப ஜனாதிபதி

இந்திய உப ஜனாதிபதி டாக்ரர் சங்கர் தயாள் சர்மா மே 26 இல் குடும்ப சகிதம் வேளாங்கண்ணிக்குச் சென்று வழிபாடுகளில் பங்குபற்றினர். தஞ்சைப் பேராயர் பி. ஆரோக்கியசாமி உப ஜனாதிபதியை வரவேற்றூர். பரிபாலகர் அருள்திரு. எஸ். எல். கபிரியேல் உடனிருந்தார்.

திருத்தலத்தின் கீழ்மாடி, மேல்மாடி, நூதனசாலை என்பவற்றைப் பார்வையிட்ட உப ஜனாதிபதியை அவை வெகுவாகக் கவர்ந்தன. வெள்ளியால் அமைக்கப்பட்ட திருத்தல வடிவம் உப ஜனாதிபதிக்கு பரிசாக வழங்கப்பட்டது.

## குருத்துவத் திருநிலைப்படுத்தல்



அருள் சகோதரர் இம்மனுவேல்பிள்ளை அவர்கள் நிகழும் 1989 ஆம் ஆண்டு ஆடி மாதம் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு சிலாப மறைவட்ட ஆயர் பேரருள்திரு. பிறங் மார்க்கஸ் பர்ணந்து அவர்களினால் சிலாப- புனித மரியாள் பேராலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்படுவார்.

இவர் புத்தளம்- மாம்புரியைச் சேர்ந்த காலஞ்சென்ற செபஸ்ரியன்பிள்ளை- லூர்த்தம்மாள் தம்பதிகளின் இளைய புதல்வராவார். பெற்றோரின் மறைவையடுத்து அதே இடத்தைச் சேர்ந்த இவரது உறவினரான மரியாம்பிள்ளை தம்பதிகள் இவரது பாதுகாவலராக விளங்கினர்.

மாம்புரி றோ. க. தமிழ் வித்தியாலயத்தில் இவர்


(8-ம் பக்கம் பார்க்க)


## மன்னார் ஆயர் பேரருள்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களுக்கு அன்பு வாழ்த்துக்கள்



மன்னார் ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைஅவர்களின் பெயர் கொண்ட புனித தோமையார் தினம் ( 3—7—89 ) திங்கட் கிழமையாகும்.

இச்சுபதினத்தில் ஆயர்தம் சேவை மேன்மேலும் சிறந்தோங்க இறையருளையும் புனித தோமையாரின் மன்றாட்டுக்களையும் இரந்து நிற்கின்றோம்.

## ஜேர்மன்வாழ் தமிழரின் திருவிழா

தமிழர் சிலர் ஒன்று சேர்ந்து புனித அந்தோனியார் திருநாளைக் கடந்த 13-ம் திகதி மேற்கு ஜேர்மனியில் உள்ள "முஞ்சன் கிளட்பாக்" நகரில் கொண்டாடினார்கள். புனிதரின் திருநாள் பலிப் பூசை அருள் தந்தை ஜெயசேகரம் அடிகளாரால் தமிழில் நிறைவேற்றப்பட்டது.

ஜேர்மன் மக்களுக்கு, ஆர்மோனியம், தபேலா, கைத்தாளத்துடன் அமைந்த உருக்கம் நிறைந்த தமிழ் பாடலின் ராகம் மிகவும் சந்தோசத்தைக் கொடுத்தது.

திருமதி
அல்போன்சா ஸ்ரனிஸ்லாஸ்
மேற்கு ஜெர்மனி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம்கருத்து

## இருவழிப் பயணம்

ஐரோப்பிய மறைபோதகர்கள் அருகிவரும் இந்நாட்களில் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலுமுள்ள மறைபோதக திருச்சபை தனது சொந்த தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடியதாக இருப்பது மட்டுமல்லாமல் பிறநாடுகளுக்கு மறைபோதகர்களை அனுப்பக் கூடியதாகவுமிருக்கின்றது. இதற்குக் காரணம் ஓர் இளம் பிரெஞ்சுப் பெண்ணின் வாழ்வில் ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சி.

நூறு ஆண்டுகளுக்குமுன் 1889 இல் நிதி பற்றாக்குறையினால் தமது சிறிய குருமடத்தில் சேரும் அநேக மாணவரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமலிருப்பதாக, ஜப்பான் நாகசாக்கி ஆயர் ஒரு பிரெஞ்சு பெண்ணுக்கு கடிதம் எழுதினர். அவள் தனது நெருங்கிய நண்பர்கள் உறவினரை ஒன்று சேர்த்து இத்தகைய வேண்டுகோள்களுக்கு தாராளமாக உதவ வேண்டுமெனத் தீர்மானித்தாள். அதன் பயனுகவே சுதேச அழைத்தல்களுக்கான புனித இராயப்பர் சபை உருவானது.

இன்று அகில உலக அமைப்பாக வளர்ந்து, பல்வேறு குருத்துவ மாணவர்களையும், புகுநிலைத் துறவியரையும் பராமரிப்பதில் ஈடுபட்டுவரும் இச்சபையின் கர்த்தா ஜீன் பிகாட். இவ்வாண்டு அவளது முயற்சியின் நூற்றாண்டு விழா ஜூலை 9 ஆம் திகதி ஆரம்பமாகி, ஒரு ஆண்டு முழுவதும் நினைவுகூரப்பட இருக்கின்றது.

இந்த நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அகில இலங்கை குருக்களின் மகாநாடு, பல்வேறு மட்டங்களில் கட்டுரைப் போட்டிகள், வேறு பல விசேட நிகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளன.

எமது பத்திரிகையில் வெளிவரும் சிறப்பு மலரை மாணவர்கள் பத்திரப்படுத்தி எதிர்வரும் இதழ்களில் வெளிவரவுள்ள போட்டிகளுக்குத் தயார்ப்படுத்த முடியும். இது தொடர்பான வேறு பல ஆக்கங்களும் வெளிவரவுள்ளன.

மறை போதகர்களை உருவாக்க ஜீன் பிகாட் நூறு ஆண்டுகளுக்கு முன் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக உருவாக அகில உலக அமைப்பு இருவழிப் பயணத்தை மேற்கொள்ளுகின்ற ஓர் அமைப்பு

முன்னைய காலங்களிலே நாங்கள் கொடுப்பதிலும் பெறுவதே மேல் என்று வாழ்ந்து வந்தோம். இப்போது பெறுவதிலும் கொடுப்பதே மேல் என்ற உணர்வு மேலோங்கி நிற்பதற்கு சுதேச குருக்களின் புனித இராயப்பர் சபை ஒரு கருவியாக இருக்கின்றது.

யாழ் மறைவட்டத்திலுள்ள புனித மடுத்தீனுர் குருமடக்கட்டிடம் 1883 ஆம் ஆண்டு ஆரம்பமாகி, தற்போது வீரகெம்பீரமாகக் காட்சிதரும் முழுமையான வடிவத்தை 1889இல் பெற்றுக்கொண்டது. அதாவது ஜீன் பிகாட்டின் சபை உருவாகுமுன்பே இக் குருமடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே சுதேச குருக்கள் இங்கு தோன்ற வேண்டும் என்ற எண்ணத்தைத் திருச்சபை கொண்டு அதற்கு 1874இல் செயல்வடிவம் கொடுத்ததற்கு இக் குருமடம் சான்று பகர்கின்றது.

ஆனல் ஜீன் பிகாட்டின் முயற்சியால் நாங்களும் குருக்களை உருவாக்கும் பாரிய பணிக்கு எங்கள் பங்களிப்பைக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் பரப்பப்பட்டதை எவரும் மறுக்க முடியாது.

உலகெங்குமுள்ள திருச்சபையோடு இணைந்து ஒரே நோக்கத்துக்காக சேகரிக்கப்படும் நிதி உதவியில் நாங்கள் பங்கு கொள்ள வாய்ப்புப் பெறுகிறோம். கடந்த காலங்களில் திருச்சபையை உலகெங்கும் பரப்ப எமக்கு கிடைத்திருக்காத சந்தர்ப்பம் இப்பொழுது எமக்குக் கிடைத்திருக்கிறது.

மேலை நாடுகளிலிருந்து வந்த குருக்களின் தியாகம், சேவை, பொருள் பண்டங்களை அண்டி வாழ்ந்த நிலையிலிருந்து மாறி, எங்கள் பிள்ளைகள், எங்கள் மண்ணின் மைந்தர், தங்கள் முயற்சியாலும், பிரயாசையாலும் நற்செய்திக்கு சான்றுபகர, நற்செய்தியைப் போதிக்க முன்வருவதோடு உலகளாவிய ரீதியில் இப்பணிக்காக நாம் உதவ ஜீன் வழிசமைத்துள்ளார்.

நூற்றாண்டு விழாவை நினைவு கூர்ந்து, இச்சபையின் அரும்பணியை உணர்ந்து, எமது பங்களிப்பையும் சேர்த்துக் கொள்வோம்.

## சூசையப்பர் அம்மானை வெளியீட்டுவிழாவும், அமுதகவி எம். விக்டர் (யாழ். ஜெயம்) அவர்களது பாராட்டு வைபவமும் : தொகுப்பு

**கலை நிலா :**

"கலைஞர்கள் வாழும் போதே கௌரவிக்கப்பட வேண்டும்" என்ற கோட்பாட்டைத் தன் குறிக்கோள்களுள் ஒன்றுகக் கொண்டியங்கிவரும் திருமறைக்கலாமன்றத்தின் நல்முயற்சியால், சூசையப்பர் அம்மானை வெளியீட்டு விழாவும், அமுதகவி எம். விக்டர் (யாழ். ஜெயம்) அவர்களது பாராட்டு வைபவமும், 18 06 89 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் யாழ். மறைக்கல்வி நிலையத்தில் மேதகு யாழ். ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களது தலைமையில் இடம்பெற்றது. இவ்விழாவில் இலக்கிய ஆர்வலர்களும், அன்பர்களும் கலந்துகொண்டனர்.

யாழ். ஆயர் அவர்கள் மங்கள விளக்கேற்றி வைக்க இறை வணக்கத்துடன் ஆரம்பமான இந்நிகழ்ச்சியில் திரு. வி. ஜே. கொன்ஸ்ரன்ரைனும், திரு. அ. பிரான்சிஸ் ஜெனம் அவர்களும், வரவேற்புரை நிகழ்த்தினுர்கள். சூசையப்பர் அம்மானையின் வெளியீட்டில் ஆண்டகை அவர்களது பங்களிப்பை இவர்கள் விதந்துரைத்தார்கள். வரவேற்புரையை தொடர்ந்து தலைமையுரையாற்றிய யாழ். ஆயர் கலாநிதி மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் அம்மானை என்ற இலக்கிய வடிவத்தின் வரலாற்றுப் பின்னணிச் சுருக்கத்தை தெளிவுபடுத்தி, இசை அமைப்பு அம்மானையுடன் பின்னிப் பிணைந்துள்ள தன்மையினை இராகத்தோடு பாடிக் காட்டி. அம்மானையுடன் சபையோர் அனைவரையும் ஒன்றிக்கச் செய்துவிட்டார். பழைய அம்மானைகள் தேடி எடுக்கப்படவேண்டும். அவற்றைப் பொதுமக்கள் கரமெட்டும் வகையில் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற தம் ஆவலையும், இச்சந்தர்ப்பத்தில் அவர் தெளிவுபடுத்தினுர்.

தொடர்ந்து சூசையப்பர் அம்மானை நூலிற்கான ஆய்வுரைகள் ஆசிரியர் திரு. சூசை அமலதாஸ், பண்டிதர் திரு செ. செல்வரட்ணம் ஆகியோரால் ஆற்றப்பட்டன. திரு. சூசை அமலதாஸ் அவர்கள் நூலின் முழுவியாபகத்தையும், உள்ளடக்கிக் குறிப்பிடத்தக்க பகுதிகளைச் சுட்டிக்காட்டியும், சுவைத்துக்காட்டியும், தற்காலத்திறகேற்றவகையில் அம்மானையை ஆக்கியளித்த 'அமுதகவி' அவர்களை உச்சிமேற் கொண்டாடியும், தம் ஆய்வினைச் செவ்வனே செய்து முடித்தார்.

பண்டிதர் திரு. செ. செல்வரட்ணம் அவர்கள் தம் ஆய்வுரையில் தேங்காய்ப்பாகமாக கடின நடையில் இருந்த தேம்பாவணிக்கு வழிநூலாக எளிமையுடன், சுருக்கமாக கவியின்பம் குன்றுது, கவிஞர் சூசையப்பர் அம்மானையை பாடியுள்ள தன்மையினைத் தெளிவுபடுத்தி, மாணிக்க வாசகரின் திருவாசகத்தேன் மாந்தித் [illegible] அம்மானையின் தெவிட்டாத சுவையில்தான் திளைத்து விட்டதாகக் குறிப்பிட்டார்.

ஆய்வுரைகளையடுத்து சூசையப்பர் அம்மானை வெளியீட்டு வைபவம்இடம்பெற்றது. முதற்பிரதியை ஆசிரியர் திரு. செ. எலியாஸ் அவர்கள் யாழ். ஆயர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

பாராட்டுரை வழங்கிய அருள். பிலிப்பையா இதனை இதனல் இவர் முடிக்குமென்றுய்ந்து அதனை அவர் கண் விடும் ஆயர் அவர்களது வல்லமையை மனந்திறந்து பாராட்டியதனூடாக இத்தகையதொரு அம்மானையை இத்தகைய சிறப்புடன் யாழ். ஜெயத்தைத் தவிர வேறு எவரும் பாடிவிட முடியாதென விதந்துரைத்தார்.

தொடர்ந்து, வாழ்த்துப்பா இசைத்த அருள்திரு கி. ஜெபநேசன் அடிகளார் அவர்கள் கவிஞரின் கவித்துவத்திற்குச் சான்றுகத் திகழும் அவரது முன்னைய படைப்புகளை தம் பாவிலே நினைவு கூர்ந்தார்.

நிகழ்ச்சியின் முக்கிய வைபவமாக சூசையப்பர் அம்மானை ஆக்கிய அமுதகவி ம. விக்டர் அவர்களுக்கு யாழ். ஆயர் அவர்கள் பொன்னுடை போர்த்தினுர். மங்கள இசையின் பின்னணியில் மாலைகள் நிறைந்த கழுத்துடன் பொன்னுடை மின்ன நின்ற கவிஞர் அவர்கள் கலையின் கௌரவத்திற்கு ஓர் சான்றுக அங்கே நின்ற காட்சி சபையோர் அனைவரையும் உளம் சிலிர்த்துப் புளகாங்கிதமடையச்செய்தது.

விழாநாயகர் அவர்கள் தம் உரையில் நடந்துகொண்டிருக்கும் பொம்மலாட்டத்தில் தாம் வெறும் பொம்மையே எனவும், தன்னை முழுமையாக இயக்கி வைத்த சூத்திரதாரி யாழ். ஆயர் அவர்களே எனவும் உளம் நெகிழ எடுத்துரைத்தார், இறையருளாலேயே இத்தகையதொரு முயற்சி தன்னுல் கைகூடியது எனக்குறிப்பிட்டு. இவ்விழா கவிஞனுக் குரியவிழாவோ, கவிதைக்கு எடுக்கப்படும் விழாவோ அன்றி நன்றிக்கு எடுக்கப்படும் விழா என்றுரைத்து, என்றும் பணியுமாம் பெருமை என்பதற்கோர் இலக்கணமாய்த் திகழ்ந்தார்.

விழாவின் இறுதிநிகழ்ச்சியாக கலைநிகழ்ச்சி இடம்பெற்றது. திருமறைக்கலாமன்ற இசைக்குழுவினரால் சூசையப்பர் அம்மானையின் காப்பு, பாயிரம், நாட்டுச் சிறப்பு ஆகிய பகுதிகள் இசைக்கப்பட்டன. தொடர்ந்து திருமறைக் கலாமன்ற நடனப்பகுதி ஆசிரியை நளாயினி குழுவினரின் 'கீர்த்தனம் நீ உரைப்பாய் அனுமானே' நடனம் சிவராஜா சகோதரிகள் மூவரினுல் நிகழ்த்தப்பட்டு சபையோர் உள்ளத்தை ஈர்த்துக் கொண்டது.

5-30 மணியளவில் திரு. கி. ம. நெல்சன் அவர்களது நன்றியுரையுடன் விழா நிறைவடைந்தது. மறைந்தபின்பும் வாழும் வன்மை பெற்ற கலைஞரை வாழும் போதே கௌரவித்து விழாவெடுத்ததன் மூலம் திருமறைக்கலாமன்றம் தன் பெருமையை மேலும் ஒருபடி உயர்த்திக் கொண்டுவிட்டது.

நா. விமலாம்பிகை

### 11-ம் வருட நினைவு அஞ்சலி



மில்றெட் புஷ்பறட்ணம்

பிறப்பு: 22-10-1954 இறப்பு: 04-07-197?

அரும்பாகி மொட்டாகி
பூவாகிய எம்
உறவுப் பிணைப்பில்
உம் பிரிவின் துயர்
மணம்பரப்பா மலராகிட்டே.

இவ்வின் ஆன்ம சாந்திக்காக 04-07-189? செவ்வாய் மாலை 5.00 மணிக்கு செம்பியன் பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலயத்திலும், காலை 6.15க்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திலும் இரங்கற் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். இவவிற்காகச் செபிக்கும்படி நினைவூட்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
கணவன், மகள், பெற்றோர், உடன் பிறவிகள், அண்ணி மார்.
"புஷ்பறட்ண மகால்"
செம்பியன் பற்று A/140

### 3-ம் வருட நினைவஞ்சலி



ச. வெற்றிநாயகம்

அன்னைமடியில் :
05-04-1950
ஆண்டவன் அடியில் :
13-07-1?86

சிவியத்தில் நேசித்தோம்
மரணத்திலும் மறவோம்

இவரின் ஆன்மசாந்திக்காக 13-7-89 வியாழக்கிழமை பிற்பகல் 5-30 மணிக்கு ஆவணம் புனித கார்மேல்மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி. பெற்றோர்,
சகோதரங்கள், மருமக்கள்.
ஆவணம் நானுட்டான்.

# புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபருடன் — ஒரு பேட்டி



பேட்டி கண்டவர்:— அ. சந்தியாப்பிள்ளை (பொதுநிலை விரிவுரையாளர்)

(சென்றவாரத் தொடர்ச்சி)

1990-ல் (அடுத்த வருடம்) "குருத்துவ உருவாக்கம்" என்ற தலைப்பில் ஆயர் பேரவை நடக்க இருக்கிறது குறிப்பிடத்தக்கது. அதையொட்டிய திருத்தந்தையின் திருமடலில் ஒரு குருமடமாணவன் தன் வாழ்வில் 1. நற்செய்தியின் தன்மையைப் பற்றிக் கொண்டு அதன்படி வாழ்பவராகவும். 2. காலத்தின் அறிகுறிகளை இனங்கண்டு கருத்துக் கொடுத்து, நற்செய்தியின் வழியில் நடைமுறைப்படுத்திக் கண்டுவழங்கக் கூடியவராக இருக்கவேண்டும் என்கிறார். அதாவது அன்றாட பிரச்சனைகளுக்கும் சவால்களுக்கும் பதிலாகவும் ஒளியாகவும் நற்செய்தியைக் கொண்டு செல்பவராக இருக்க வேண்டும். இந்நோக்குடன் குருக்களை உருவாக்க நாம் முயல்கிறோம். அவர்கள் குடும்பத்தோடும் உலகோடும் தொடர்புடையவர்களாகவும் அரசியல், பொருளாதார கலாச்சார நிலைகளின் மத்தியில் வாழ்பவர்களாகவும் பயிற்சி பெறுகிறார்கள். தங்கள் பணிவாழ்வில் அவர்களுக்கு உதவ, ஈடு கொடுக்க ஆழமான ஆன்மீக வாழ்வுப் பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. முன்பு போல் தங்கள் வாழ்வில் எதிர்நோக்கவிருக்கும் சகல பிரச்சனைகளுக்குமான விடைகளோடு அவர்கள் இப்போது வெளியேறுவதில்லை. அவற்றிற்கு முகம் கொடுக்க, கிறிஸ்துவின் மனநிலையில் உலகை எதிர்கொள்ள அனுப்பப்படுகிறார்கள். தற்போதைய கல்விமுறைபோன்று அறிவிலும், அனுபவத்திலும் மேலும் வளர, முன்னேற வழிகாட்டப்படுகிறது. எனவே இங்கு அளிக்கப்படுவது ஒரு முற்றுப் பெறாத(Open ended) உருவாக்கம். முன்னைய குருக்கள் திருச்சபையை மையமாகக் கொண்டு அதைக் கட்டி எழுப்பவர்களாக இருந்தனர். மறைக்கல்வி யூட்டல், திருமுழுக்காட்டுதல், மதமாற்றம் செய்தல், கத்தோலிக்க மந்தையைப் பராமரித்தல், முழுஉலகத்தையும் சார்ந்தன. பிற உலகைச் சார்ந்ததாக எதுவும் இருக்கவில்லை. இப்போ திருச்சபை சார்ந்த பணிகள் மத்தியில், பரந்த உலகில் நற்செய்தி விழுமியங்களைக் கொண்டு சென்று இறையரசை வளர்ப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளனர். எனவே சகலவித பணியாளர்களோடும் தொடர்பு கொள்ளுதல், கிறிஸ்தவ ஒன்றிப்பு, மதங்களுக்கிடையிலான கலந்துரையாடல் சமூக முன்னேற்றப் பணிகள் முதலியன இவர்களின் பணிகளில் இடம்பெறுகின்றன.

கேள்வி:- இனப்பிரச்சனையும், கலவரமும். இக்குருமடமும் ஆரம்பிக்கப்படுவதற்கு ஒரு காரணமாக அமைந்தது. இன்று உருவாகும் குருக்கள் தேசிய, பரந்த சகோதரத்துவ உணர்வு குறைந்தவர்களாக வளரும் சாத்தியம் இல்லையா?

பதில்:- இப்பயம் முன்பிருந்தே உணரப்பட்டது. விசேடமாக தெற்கிலுள்ளோர் நாடு பிரியுமுன் ஏன் திருச்சபை பிரிகிறது என்ற கேள்வியை எழுப்பினர். இதுவரை காலமும் ஒரே கல்லூரியும் ஒருங்கிணைந்த உருவாக்கமும் ஒரே திருச்சபை என்ற தோற்றமும் இருந்தது இவற்றை இழக்கப் போகின்றோம் என்றனர். ஆனால் இனரீதியான இடைவெளி வளர்ந்ததை மறுக்க முடியாது. தமிழ் மாணவர்கள் கண்டியில் வாழவே பயப்பட்டனர். இச்சூழ்நிலையில் இக்கல்லூரி உருவாகியது. எமதாயாரின் பிரதிநிதியாக மட்டுநகர் ஆயரும் கொழும்புப் பேராயரும் உரோமைக்கு அழைக்கப்பட்டு இவ்விடயம் ஆராயப்பட்டு இக்குருமடம் தொடராம் என்ற முடிவு எடுக்கப்பட்டது மறுபுறம இங்கு ஒரு குருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று அதற்கு முன்பிருந்தே தேவை உணரப்பட்டது. தமிழ்மாணவரின் பணித்தளம், கலாச்சாரம், சூழல் மொழிக்குகந்த உருவாக்கம் தேவையென உணரப்பட்டது. இதன் பதில் இனக்கலவரத்தால் முன் தள்ளப்பட்டது. தம்மைச் சுற்றியுள்ள உலகின் வாழ்வு அனுபவத்தோடு இணைந்த உருவாக்கம் இங்கு கொடுக்கப்படுகிறது... இப்போது நாம் மட்டுமல்ல ஆயர் மன்றமும் உரோமையும், இலங்கையில் இரு குருத்துவக் கல்லூரிகளும் தேவை என்றும் ஏற்றுள்ளனர். முன்பிருந்த இனவாரியான சிந்தனையும் எதிர்ப்பும் இப்போது தணிந்து உறவு சீராகி விட்டது. நான் கண்டியில் தொடர்ந்தும் விரிவுரையாற்றுகிறேன். இங்கிருந்து 2 விரிவுரையாளர்களையும் 5 மெய்யியலாளர்களையும் அங்கு சில பரீட்சைகளுக்காக அனுப்பியுள்ளோம். இங்கு பகுதிநேர விரிவுரையாளராக, அங்கிருந்தும் சிலர் வந்திருக்கின்றனர். நிலைமை சீரடைய வேறு சிலரும் அழைக்கப்படலாம். ஒரே நாட்டில், உதாரணமாக இந்தியா போன்று பல குருத்துவக் கல்லூரிகள் இருக்கலாம். திருச்சபையின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் எதிராக இந்நிலை அமையாது.

கேள்வி:- புதிய குருக்களிலும், பார்க்கசேவைகூடியவர்கள் பொதுநிலையினர் மட்டில்கூடிய அளவு ஏற்பு, ஒத்துழைப்பு, பாராட்டு காட்டுபவர்களாக இருக்கின்றனர் என்ற ஒரு கருத்து நிலவுகின்றது. இது உண்மையா? சீர்படுத்த என்ன செய்யப்படுகிறது.

பதில்:- இங்கு பொதுநிலையினர் பற்றியும் அவர்களின் அனுகுமுறை பற்றியும் முன்பு இல்லாத விரிவுரைகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் நடைமுறையில் வித்தியாசம் இருக்கலாம். அதற்கான காரணங்களை சூழலை ஆராயவேண்டும். முதிர்ந்த குருக்கள் பழமைவாதிகளான வயதுவந்தோரோடு ஒத்த கருத்தைக் கொண்டிருப்பார்கள். இளங்குருக்கள் இளைஞரின் மனப்பாங்கு கருத்துக்கள் ஆர்வத்தோடு ஒத்தமையால் அவர்களோடு ஒத்துச் செயல்படுகிறார்கள் என நினைக்கிறேன். புதுமுறைகளை முதியோருக்கு ஏற்ற முறையில் பொறுமையுடன் விளக்கவும் வயதால் ஏற்படும் இடைவெளியை நிரப்பவும் இளங்குருக்கள் முயலாமலிருக்கலாம். முதியோரின் கருத்துக்களையும் கவனத்திற்கெடுத்து திருப்திப்படுத்துவது அவர்களின் கடமைதான். எனவே இவ்வபிப்பிராயம் முழுமையாகச் சரியென்பதற்கில்லை.

கேள்வி:- குருத்துவ உருவாக்க முறை கூடிய அளவு அறிவு சார்ந்ததாகவும் வாழ்வு, பணி சார்பான ஆளுமையை வளர்க்கும் தன்மைகளில் குறைவானதாகவும் உள்ளதென்று இன்னொரு அபிப்பிராயம் நிலவுகிறது. இது பற்றி உங்கள் கருத்தென்ன?

பதில்: இக்குறைபாடு ஓரளவுக்கு நிலவியதுதான். இங்கு பல்கலைக்கழகம் போன்று விரிவுரைகள் மூலம் மெய்யியல், இறையியல் கற்பிக்கப்படுகிறது. ஆனல். கொடுக்கப்படும் உருவாக்கம் இவை மட்டும்தான் அல்ல. ஒரு குருவுக்கு வழிபாடு, இறையரசு சார்பான பணிகளுமுண்டு ஆனால் முக்கியபணி இறைவாக்குரைத்தலாகும். போதிப்பவருக்கு போதிய அறிவு தேவை மெய்யியலினூடாக காலத்தின் குறிகளை அடையாளங் காணவும் தாம் வாழும் உலகை அறியவும், இறையியலில் இறை வார்த்தையும் அருள்சாதனங்கள், போதனைகளாலான திருச்சபையின் வளர்ச்சி பற்றியும் கற்பிக்கப்படுகிறது. இத்துடன் ஆன்மீக வாழ்வு, திருப்பணிகள் சார்பான பயிற்சிகளும் இடம்பெறுகின்றன. இவை போதாமலிருக்கலாம். பிரிவினைச் சகோதரர்கள் சேவைக்காலத்திலேயே உருவாக்கத்தையும் பெறுகின்றனர். எமது பாரம்பரியத்தில் முதலில உருவாக்கமும், பின்பு, பணியும் இடம் பெற்றன. இப்போ இரண்டையும், ஓரளவுக்குக் கலந்தளிக்கின்றோம். வெளியேறும் பொழுதுகூட உருவாக்கமும் முழுமையாகப் பெற்றவர்களாக அன்று. மேலும் தொடர்ந்து வளர்பவர்கள் என்ற மனநிலையுடனேயே செல்கின்றனர்.

கேள்வி: குருக்களை உருவாக்கும் பணியில் ஒரு பகுதியாக இளம் குருக்களுக்கென வருடாந்தம் ஒரு கருத்தரங்கு நடாத்துகின்றீர்கள். [illegible] அனுபவங்களைப் பகிரவும், ஒருவரை ஒருவர் வழிகாட்டவும் குருமடத்தில் கற்றதையும், பெற்றதையும் பங்கில் வாழ்ந்து. செயற்பட்ட பின்னர் மீட்கவும், புதுப்பிக்கவும் சமகாலத்திற்கேற்றதாக்கவும் இது மிகவும் உதவும் ஆனால் இவ்வருடம் போதிய ஆர்வம் காட்டவில்லை என்று அறிகிறேன். இதுபற்றி உங்கள் அபிப்பிராயமும் திட்டமும் என்ன?

பதில்: சென்ற வருடமே இதை ஆரம்பித்தோம். முதலாவதாகையால் பங்களிப்பு உற்சாக மூட்டுவதாய் இருந்தது. அவர்களும் மகிழ்ந்தார்கள். அதில் யாழ், மன்னார் மறைவட்ட இளங்குருக்கள் பங்கு பற்றினார்கள். இவ்வருடம் திருமலை—மட்டுநகர் மறைவட்டக் குருக்களையும் அழைத்தோம். அங்கிருந்து 10 குருக்கள் சமூகங்கொடுத்தது திருப்தியானது. ஆனால் ஏனைய இரு மறைவட்டங்களிலிருந்தும் வரவு குறைவாய் இருந்தது. எமக்கு வியப்பைக் கொடுத்தது. அதற்கு முக்கிய காரணம் குருக்கள் இவற்றிற்கு மேலாக தம் மறைப்பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதே. திருமணம் மற்றும் மறைப்பணி சார்ந்த நிகழ்ச்சிகளையும் செயற்பாடுகளையும் சற்றுப் பின்போடவோ ஒதுக்கவோ கூடாது என்று எண்ணி பங்குப்பணிகளால் விலங்கிடப் பட்டவர்கள் போலுள்ளார்கள். அது பிழை. இந்நிலை நிவர்த்தி செய்யப்பட வேண்டும். தொடர்ச்சியான உருவாக்கம் ஒரு உண்மைத் தேவை, முக்கியமானது என்று உணரப்பட வேண்டும். அப்பொழுதே அவர்கள் நேரத்தை ஒதுக்க முடியும். எதிர்காலத்தில் மடுபோன்ற வசதியுள்ள இடங்களுக்கு மாற்றி ஒரு வருடத்திற்கு இரு தடவைகள் கருத்தரங்கை நடாத்தியுள்ளோம். இதனால் அவர்கள் தங்களுக்கு வசதியான நேரத்தைத் தெரிந்தெடுக்க முடியும். இம்முறை பங்குபற்றுதோரை கண்டிக்குச் சென்று பங்கு பற்றுமாறு எமது ஆயர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கேள்வி: விரிவுரையாளர்களுக்கும், குருமாணவர்களுக்குமிடையில் நிலவும் உறவையும், மனநிலையையும் அவதானித்ததிலிருந்து குருக்களாக உருவாக்குவதிலும் உருவாகுவதிலும் இருசாராருக்குமிடையில் கூடிய ஒத்துழைப்பும் நட்புறவும் நிலவவேண்டும் என்று எண்ணுகிறேன். மறுபுறம் பொதுநிலை விரிவுரையாளர்களுடன் கூடிய சுதந்திரமாகவும் நெருக்கமாகவும் அன்போடும் மாணவர்கள் பழகுகின்றார்கள். குருக்கள் மட்டில் பயந்தவர்களாகவும் ஒதுங்கி இருப்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

பதில்: இங்கு பணியாற்றும் விரிவுரையாளர்களில் ஒருவராகிய உமது கருத்து ஓரளவிற்குச் சரியானது. பயமும் பிரிந்திருக்கும் தன்மையும் நிலவுகிறதுதான். குருமாணவர்கள் தாம் திருநிலைப்படுத்தப்படும் வரையும் தாங்களும் பொதுநிலையினர் என எண்ணியே ஒதுங்கியிருக்கின்றார்கள். இங்கு மாத்திரமல்ல எல்லாக் குருமடங்களிலும் இந்நிலமை நிலவுகின்றது. மேலும் பரந்து நோக்கினால் திருச்சபை முழுவதிலும் எல்லா மட்டங்களிலும் இப்பயம் நிலவுகின்றது. ஆயர்கள் திருத்தந்தைக்கும், குருக்கள், ஆயர்களுக்கும், மக்கள் குருக்களுக்கும் பயப்படுகிறார்கள். இது விரும்பத்தக்கதல்ல. இருசாராருக்குமிடையில் நம்பிக்கையும் நல்லுறவும் ஏற்படுவதில் இருசாராரினதும் பங்களிப்புத் தேவை. ஒரு பகுதியினர் நெருங்கிப்பழக விரும்பினாலும் மறுபகுதியில் ஒதுங்குகின்றனர் எனவே இந்நிலைக்கு ஒரு கட்சிதான பொறுப்பல்ல. திருச்சபையில் பழைய எண்ணங்களைப் பற்றிப்பிடித்துக் கொண்டிருப்பவர்கள். ஒரு பகுதியை மிகவும் உயர்த்தியும் மற்றப்பகுதியை கீழ்மட்டத்திலும் வைத்து மதிப்பீடு செய்கிறார்கள். தங்களை மதிப்பீடு செய்து, குருநிலைக்கு சிபார்சு செய்பவர்களாக குரு விரிவுரையாளர்கள் இருப்பதும் இப்பயத்துக்கு ஒரு காரணமாகி, மாணவர்கள் தங்களை இலவேளை ஒதுங்கி நடக்கலாம். குருத்துவ உருவாக்கத்துக்கு இத்தகைய போக்கு உகந்ததல்ல. இதை நிவர்த்தி செய்ய நீண்ட முயற்சி தேவை. இதில் இரு பகுதியாரும் தங்களது அபிப்பிராயங்களை அச்சமின்றி தெரிவிக்கவும் கேள்விகளை எழுப்பவும் கூடியதாக கலந்துரையாடல்களும் தற்போது இங்கே இடம் பெற்றிருக்கின்றன. தொடர்ந்தும் முயற்சிப்போம்.

கேள்வி: பங்குகளில் இடம் பெறும் வழிபாடுகள் மக்களின் வாழ்வோடு இணைந்ததாக உயிர் துடிப்புள்ள, சமகால நிகழ்வாக அல்லாமல் ஒரு வரட்சியான, நாடகம் போன்று, புதுப்பொலிவற்றவையாக இருக்கின்றன. இந்நிலையை மாற்ற இங்கே ஏதாவது புதியவழி முறைகள் கையாளப்படுகின்றனவா?

இது முழுத் திருச்சபையுமே எதிர்நோக்கும் ஒரு பொதுப் பிரச்சனை. வழிபாடுகள் பீடத்தில் நடத்தப்படும் சடங்காக இராமல், மனித வாழ்வோடு பிணைந்ததாக இருக்க

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று இம்மண்ணில் கிறிஸ்து

கிறிஸ்தவன் எனும் பெயரை கொண்டு இவ்வுலகில் வாழும் நம்மில் பலர் இன்னும் கிறிஸ்துவை தேடி அலைந்து கொண்டிருக்கின்றோம். கிறிஸ்துவை சந்திக்க துடித்துக்கொண்டு இருக்கின்றோம். ஆனால் ஒன்றை நாம் அடிக்கடி மறந்து விடுகின்றோம். இறைவன் மனிதனை இவ்வுலகில் படைத்த போது தன் சொந்த சாயலாகவே படைத்தார். அதாவது ஒவ்வொரு மனிதனும் மனித தன்மையுடன் சேர்ந்து தெய்வீக தன்மையையும் தன்னுள் கொண்டுள்ளான். எனவே நாம் மனுக்குலத்தை சார்ந்த ஒவ்வொரு மனிதனிலும் இறைவனின் சாயலை அடையாளம் காண்கின்றோமா? எனச் சற்று சிந்திப்பது அவசியம். இன்று இவ்வுலகிற்கு கிறிஸ்து வந்தால் அவரை ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இருக்கின்றோமா? அவ்வாறே இறை சாயலால் படைக்கப்பட்ட மனிதனில் கிறிஸ்துவை காண்கின்றோமா? இறைவன் செயல்படுவதுவான தூதர் மூலமும் புதுமைகள் செய்வதன் மூலமும் மட்டுமல்ல. நம்முடன் சேர்ந்து, நாளாந்த வாழ்வில் பங்கு கொள்ளும் ஒவ்வோரு மனிதனின் மூலமும் சகோதரர்கள், நண்பர்கள் மூலமும் இறைவன் நம்முடன் உறவாடுகின்றார்.

நாம் உண்மையிலேயே கிறிஸ்துவை அறிந்து கொள்ள வேண்டுமானுல், கிறிஸ்துவை அன்பு செய்ய வேண்டுமானுல் முதலில் நம்முடன் கூட வாழும் நம் சகோதரரை அன்பு செய்ய வேண்டும். அவர்களை புரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும். அவர்களின் இன்ப துன்பங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும் அவ்வாறுன ஓர் வாழ்க்கையை நாம வாழ்ந்தால் மட்டுமே, நாம் கிறிஸ்துவையும், அவரது அளப்பெரிய அன்பையும் கண்டடையலாம்.

செல்வி. ஷாமினி இம்மானுவேல்
மாத்தளை

## சாதனையில் விரைந்திடுவீர்




சோதனை தொடர்ந்தாலும்
சாதனையில் தளராதே.
வேதனை வேளையிலும்
சாதனையில் விரைந்திடுவீர்.
எப்பயன் வரினும்
உன்வினை நல்வினையே!
போதனையின் வெற்றி
சாதனையில் பூச்சியமா?
பலவீனர்களின் தோற்றம்
பலசாலிகளால் மாற்றமாகும்.
தீரமான வீரத்துடன்
தீமைகளை விரட்டிடுவீர்.
திண்ணிய நெஞ்சுடனே
தரணியிலே திகழ்ந்திடுவீர்.
தூற்றுவார் தூற்றினுலும்
ஏற்றத்தைக் கைவிடாதீர்.
போற்றுவார் போற்றினுலும்
ஏற்றத்தில் மயங்கிடாதீர்
நல்வினையில் நாள்தோறும்
வல்லவனுய் விளங்கிடுவீர்.

—வி. பி.

## சிந்தியுங்கள்.....

அன்பைத் தேடும் இளைஞர்களே
ஆதனம் எனும் சீதனத்தை
ஆதாரமாகக் கொள்ளாதேயுங்கள்
ஆண்குலமே சிந்தியுங்கள்.

சந்திக்குச் சந்தி நிற்கும்
சரித்திரத்தின் நாளைய இளைஞரே
சீர் கெட்ட உலகை இன்றே
சீர் படுத்தச் சிந்தியுங்கள்

கண்ணைத் துயின்றவமே
காலத்தைப் போக்கும் மாணவரே
கல்விக் காலம் போய் விட்டால்
காலம் பின்னை வராது சிந்தியுங்கள்.

உண்மையை உறங்க வைக்கும்
உழைப்பாளத் தோழர்களே
உருண்டோடும் உலகினில் — உண்மையை
உயர்த்திட சிந்தியுங்கள்.

பா: பூலனா. குருஸ்
பேசாலை

## இளமையினுல் படைத்திடுவாய்...

இளமையை அடைந்து
விட்டாய் — நீ
இளைஞனுக மாறிவிட்டாய்
இளமைத் துடிப்பால் பொலிவு
பெற்றுய்
இறப்புவரை இவை உன்னில்
இருந்து விட்டு செல்லுவதில்லை.
இளம் வயதில் வந்து விடும்
இடைநடுவே சென்று விடும் —
எனவே
இருக்கும் போது இவ்வுலகில்
— உன்
இளமையினுல் இலட்சியங்கள்
படைத்திடுவாய்.

வெ. யூஜின், மூதூர்.

## சிந்திக்க சிரிக்க

எனது ஆடு English கதைக்கும் என்றுன் ஒருவன், எங்கே பார்ப்போம் என்றுர் மற்றவர். ஆட்டிடம் ஏப்பிரலுக்கு (April) பின்வரும்மாதம் என்ன என்று ஆட்டைக்கேட்டான் ஆடு 'மே' 'May' என்றது. பின்பு யூனின் முன்வரும் மாதம் என்ன என்று ஆட்டைக் கிண்டினுன். ஆடு 'மே' 'May' என்றது. —அ. ரூபன

## ஆண், பெண் இளைய வர்க்கமே...

இளையவர்களே நாளைய உலகம் உங்களது கைகளில் எனவே அனைவரும் விழிப்பாகவும், உற்சாகத்துடனும் செயற்பட வேண்டும்.

உங்களது பொறுப்புக்களை கடமை உணர்வுடன் செயற்படுத்த வேண்டும்.

எனவே பொறுப்புக்களை நாளை, நாளை என்று பின் போடாமல் உடனே செய்து முடிக்கவேண்டும்.

படிக்கப்போகாமல் இன்று வேண்டாம். நாளை படிப்போம் என்று நினைக்கவேண்டாம்.

உடனே தொடரவேண்டும்! 1989 ஆம் ஆண்டு பிறந்து ஆறு மாதம் முடிவாகிவிட்டது இந் நாட்களை எவ்வாறு கழித்தோம்? இனி நாம் ஓர் நாள்கூட முதல் கழித்த ஓர் நிமிடத்தைத் திரும்பப் பெற முடியுமா?

எனவே உடனே செயற்படுவோம்.

தொகுப்பு: ச. [illegible]
போயிட்டி, இ[illegible]

## என்னை நீ புரிந்திடு

அன்பே என்னை நீ புரிந்திடு
அறிவே ,, நீ வழி நடத்து
ஆற்றலே என்னை நீ பெருக்கிடு
ஆணவமே ,, நீ மறந்திடு
ஆசையே ,, நீ பற்றிடு
பண்பே என்னை நீ அணைத்திடு
பகைமையே ,, நீ நழுவவிடு
உழைப்பே என்னை நீ வாழவிடு
உறவே ,, நீ இணைத்திடு
உளவியலே ,, நீ மாற்றிடு
துன்பமே என்னை நீ விட்டிடு
உயிரே ,, ,, மதித்திடு
உலகமே ,, ,, புரிந்திடு.

நி. விறெட்
உரும்பையூர்.

## அமுத வாக்குகள்

''சிந்தனையின் சிறப்பை சொல்லிவிட முடியாது' - பாயிலே

''மனிதனின் இதய சிந்தனை எதுவோ அதுவே அவனது வாழ்வாகும்'' - விவிலியம்

'' உலகில் தீயது நல்லது என்று ஒன்றுமில்லை, எல்லாம் மனிதனின் எண்ணத்தைப் பொறுத்தே இருக்கிறது''
- சேக்ஷ்பியர்

'' சிந்தித்தபின் செயற்படு ''
- யாரோ

:-தொகுப்ப
M. அன்ரனற் ஜீவராணி
[illegible]




## கிறிஸ்தவ திருமண ஆயத்தம்

(சென்ற வார தொடர்ச்சி)

### திருமணம் புனித நிலைக்கு வழி

திருமண அழைப்பை முழுமையாக ஏற்று வாழ்வதால், நிறைவை அடைய வேண்டிய அருளை அளிப்பது திருமணம். இறை அன்போடு இணைந்த திருமண அன்பு மண மக்களை இறைவனிடம் இட்டுச் செல்கிறது. இதனுல் மணமக்கள் தங்கள் பண்பிற்கும், கடமைகளுக்கும், மதிப்பிற்கும் ஏற்றவாறு வாழத் தனிப்பட்ட வரம் பெறுகின்றனர். விசுவாசம், நம்பிக்கை, பரம அன்பு ஆகியவற்றுல் கிறிஸ்துவின் மனநிலையில் மூழ்கி இருக்கின்றனர். இதனுல் ஒருவர் ஒருவரைப் புனிதப் படுத்தும் பணியில் ஈடுபடுகின்றனர். குழந்தைகளும் தங்கள் பெற்றோர் புனிதமடையத் தங்களுக்குரிய வகையில் உதவுகிறுர்கள். இவ்வாறு ஒவ்வொரு குடும்பமும் தங்கள் ஞானச் செல்வங்களை ஏனைய குடும்பங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று திருச்சபை வலியுறுத்துகிறது. (இ. உ. தி. 48)

### திருமண அன்பு

திருமணமும் திருமண அன்பும் பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. என்று சொன்னுலும் இந்த நோக்கமட்டும் திருமண வாழ்வை நிறைவு செய்ய முடியாது. திருமண வாழ்வின் அன்பிலும் ஒன்றிப்பிலும் இருவரிடையேயும் உள்ள பிரிக்க முடியாத ஒப்பந்தத்தின் படியேயும் குழந்தைகளின் நலனுக்காகவும், ஒருவர் ஒருவருக்குச் சரியான முறையில் அன்பு காட்ட வேண்டும். திருமண அன்பு கணவனும், மனைவியும் தம்முள் கொள்ளும் உறவோடு இது முடிந்து விடுவதில்லை, புதிய உயிர்களைப் பெற்றுத் தருவதற்காகத்தான் இது தொடர்ந்து நீடிக்கும் நியமத்தைக் கொண்டுள்ளது. (6ம் சின். பாப்பரசர்) இதனுல் மக்கட் பேற்றைத் தவிர்க்கும் நோக்கோடு செய்யப்படும் திருமணம் செல்லுபடியாகாது வெறும் சிற்றின்ப நோக்கம் நீண்ட நாட்களுக்கு மனத்திருப்தியைத் தர மாட்டாது. எனவே மணமக்களில் இயற்கைக்கு மேலான அன்பு இருப்பது அவசியம். உயர்ந்த அன்புதான் இன்பத்திலும், துன்பத்திலும் உடல் நலத்திலும் நோயிலும் ஒருவருக்கொருவர் பிரமாணிக்கமாய் இருந்து நிறைவான அன்பு செய்யவும், மன்னிக்கவும் போதிய ஆர்வத்தையும் அருளையும் கொடுக்கின்றது. அருட் சாதனத்தால் புனிதமாக்கப்படுகின்றது. இவ்வித அன்பு வளர தியாகம் அவசியம்.

உ+ம் மனைவியின் நாகரீக உடையைக் கணவன் விரும்பவில்லை, என்றுல் அவன் விரும்பியதற்கிணங்க உடைடை அவள் அணிந்து கொள்ள வேண்டியதுதான். தன் தாய் சகோதரர்களுடன் இருக்க விரும்புகிறுள் மனைவி. இல்லை தன் கணவனின் உணவிற்கு உதவுவதற்காக அவனுடன் செல்ல வேண்டும். தன் தேகக்களைப்பைக் குறைக்க தந்தைக்கு மதுபானம் தேவைப்படுகிறது. பிள்ளையின் படிப்பிற்காக உடுப்பு வாங்குகின்றுள்.

இவ்விதமான வாழ்க்கைச் சம்பவங்களால் ஒருவர், ஒருவருக்காகத் வாழத் தெண்டித்தால் அன்பு தானுகவே கட்டப்படும். செபமும், விசுவாச வாழ்வும் இருந்தால் அன்பு மலரும். கிறிஸ்து கல்வாரி மலையில் தன்னையே எமக்குத் தியாகம் செய்தாரே அவ்வாறே மணமக்களும் தம் தியாக வாழ்வால் ஒருவர் ஒருவருக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

''ஒரு குடும்பத்தில் தம் பரம அன்பின் திட்டத்தை நிறவேற்றுவதற்காகவே நிறை ஞானத்துடன் இறைவன் திருமணத்தை நிறுவினுர்.'' (6ம் சின்னப்பர்)

## சென்று வாழுங்கள் பூசை முடிந்தது

நாலுபேர் கண்களுக்குக் காட்சியாக,
ஆலயம் செல்வோம் சோடியாக.
வீட்டுக்கு வந்தவுடன்,
விட்டு விடுவோமோ சண்டைதனை.
விளக்குமாறும் தும்புத்தடியும்,
அமைந்திடுமே எம் 'ஆம்சாக' அதனுல்
அவற்றிற்கு எம் நன்றி என்று முண்டு.

— வே. சாமுவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித இராயப்பர் சபையின் நூற்றாண்டுச் சிறப்புமலர்



## தேசிய இயக்குநரின் செய்தி

## சுதேசகுருக்கள் தினம் 9-7-1989

அன்புச் சகோதரரே,

இன்று நாம் சுதேச குருக்கள் தினத்தைக் கொண்டாடுகிறோம். இச்சந்தர்ப்பத்தில் நாம் அனைத்துலக திருச்சபையுடன் சேர்ந்து, அதன் வரலாற்றில் எப்பொழுதுமே இறைவன் அளித்துவந்துள்ள மாபெரும் கொடையாகிய மறைபோதக அழைத்தல்களுக்காக அவருக்கு நன்றி கூறுவதுடன் அதைப்பற்றி சற்றுச் சிந்திப்போம்.

நிலைமைகள் எப்படியிருந்தாலும், வாழ்விலும் தாழ்விலும், வளத்திலும் வரட்சியிலும், குழப்பத்திலும் ஒளிமயமான காலகட்டத்திலும், தன்னலமற்ற வீரத்துவம் கொண்ட ஆண்களையும் பெண்களையும் இறைவன் திருச்சபையில் தமது பணிக்கென அழைத்துள்ளார். திருச்சபையின் இருண்ட காலங்களிற் கூட அவர்களது வாழ்வு ஒளி வீசித் திகழ்ந்தது.

கிறிஸ்துவின் முதற்சீடர்களை தொடர்ந்து புனித சின்னப்பர், அந்தியோக்கு இஞ்ஞாசியார், புனித சிறில், புனித மெதொடியஸ், புனித பத்திரிசியார் புனித ஆசீர்வாதப்பர், புனித பிரான்ஸிஸ் அசிசியார், புனித பிரான்ஸிஸ் சவேரியார், புனித சாமிநாதர், புனித லிசியோ திரேசம்மாள், முதலியோரையும் இறைவனின் நற்செய்தியை உலகின் அந்தம் வரை கொண்டுசெல்வதற்கு வீரத்துடன் உழைத்த திரளான எத்தனையோ மக்களையும் இறைவன் அழைத்தார்.

நன்கு அறியப்பட்ட புனிதர்களான இந்த மறைபோதகர் மட்டுமல்லாது, வரலாற்றிலே மறைந்து இன்று அறியப்படாதிருக்கின்ற எத்தனையோபேரின் வாழ்வு இறைவன் எம்மை என்றும் அன்பு செய்து, எம்மை மீட்க விரும்புகிறார் என்பதற்கு சான்றாக உள்ளன. எல்லாக் காலங்களுக்குமுரிய மாபெரும் மறைபோதகரான யேசுநாதர் தாமே மேற்கொண்ட சிலுவை என்னும் துன்பம் மிக்க வழியை அவர்கள் அனைவரும் பின்பற்றினர்.

அவர்கள் தம்மிலே பலவீனமான மனிதர்களாயிருந்த போதிலும், இறைவன் அவர்களைத் தேர்ந்தெடுத்து தமது அருளால் நிரப்பி, பாவம் நிறைந்த உலகைப் புனிதப்படுத்தி மேன்மைப்படுத்தும் பொருட்டு அவர்களை அனுப்பி வைத்தார். இப்பணி மனிதர்களாகிய அவர்களது ஆற்றலுக்கு அப்பாற்பட்டது. ஆனால் இறையருளோ அவர்களது பலவீனத்தையே பலமாக்கியது.

புனித சின்னப்பர் கூறுவது போல் "ஞானிகளை நாணச் செய்ய மடமை என உலகம் கருதுவதை கடவுள் தேர்ந்து கொண்டார். வன்மையானதை நாணச் செய்ய வலுவற்றது என உலகம் கருதுவதை கடவுள் தேர்ந்துகொண்டார்." (கொரிந். 1;27)

வருவது வரட்டும் என்று அவர்கள் பாவியாகிய மனிதன் மட்டில் இறைவன் கொண்டுள்ள அன்பை அறிவித்ததுடன் துணிவோடும் வீரத்தோடும் சான்றுபகர்ந்து திருச்சபையில் ஏராளமான மக்களைச் சேர்த்துக் கொண்டனர். அவர்களது வலுவற்ற மனித இயல்பினூடாக இறைவனது ஆற்றல் ஒளிவீசியது.

புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாவது திருமுகத்தில் " ஆகவே நான் என் குறைபாடுகளைக் காணும் போது, இழிவுறும்போது, நெருக்கடியில் இருக்கும்போது, துன்புறுத்தப்படும்போது, இடுக்கண்ணுறும்போது கிறிஸ்துவை முன்னிட்டு நான் மனநிறைவோடு இருக்கிறேன். ஏனெனில் வலுவின்றி இருக்கும்போது தான் நான் வலிமை மிக்கவனாயிருக்கிறேன்" (12:10) என்று கூறுகிறார்.

தம்மை அர்ப்பணித்த இந்த ஆண்களும் பெண்களும் இருந்திராவிட்டால் திருச்சபையானது வரலாற்றின் அழிபாடுகளுக்கும், ஆன்மீகமுறையில் அதை அழிக்கத்தேடிய சக்திகளுக்கும் தப்பிப் பிழைத்திருக்குமா என்பது ஐயமே. எனவே சுதேசக் குருக்கள் தினத்தில் இந்த மாபெரும் அருட்கொடைக்காக முதற்கண் இறைவனுக்கு நன்றிகூறுவோமாக.

இரண்டாவதாக, இத்தகைய அழைத்தல்களுக்காக செபிப்பதன்மூலமும், அவற்றை உதாரகுணத்துடன் ஆதரிப்பதன் மூலமும் இக்கருத்திற்கான எமது அர்ப்பணத்தைப் புதுப்பிக்கும் தருணமும் இதுவே.

ஒரு குருத்துவ அழைத்தலோ, துறவற அழைத்தலோ இறைவனுடைய ஒரு கொடையாகும். இந்த விசேட அன்புச் செயலின்மூலம் மனுக்குலத்துக்கு மீட்பின் நற்செய்தியை அறிவிப்பதற்கு அப்போஸ்தலரையும், மறைபோதகரையும் ஆண்டவர் தமக்கெனத் தெரிந்து கொள்கிறார். அது ஒருவருக்குக் கிடைக்கும் விசேட சலுகையல்ல, கௌரவமுமல்ல, அதற்கு யாரும் உரிமை கோரவும் முடியாது. ஆனால் அது இறை[illegible] விசேட தெரிவாகும், அழைக்கப்பட்டவர் அதைத் தாழ்ச்சியுடனும் செபத்துடனும் ஏற்றுக் கொள்ளவேண்டும், மற்றெல்லோரும் அதை ஊக்குவித்து ஆதரிக்கவேண்டும். எமது குடும்பத்தில் ஒரு மகனுக்கோ, மகளுக்கோ குருத்துவ அல்லது துறவற வாழ்வுக்கு அழைத்தல் இருக்குமாயின் அதைத் தடுப்பதும் நசுக்குவதும் இறைசித்தத்துக்கு மாறானதாகும். அது இறை அன்பின் விசேட செயல் எனக் கருதி தாழ்மையுடன் ஊக்குவிக்கவேண்டும் இன்று போலியான உலக நலன்களால் ஈர்க்கப்பட்டு இறைவனின் அழைப்பைத் தம்து பிள்ளைகள் ஏற்காமல் தடுக்கின்ற பெற்றோர்களும் இருக்கிறார்கள். இது மிகுந்த தீங்கு விளைவிப்பதாகும். இதற்கு மாறாக, தேவ அழைத்தல்களுக்காகச் செபிக்க வேண்டும். அர்ப்பணம், செபம் நிறைந்த கிறிஸ்தவ வாழ்வின் மூலம் அத்தகைய அழைத்தல்களை ஏற்படுத்த உதவவேண்டும். எமது புதல்வர், புதல்வியரிடத்தில் அத்தகைய அழைத்தலுக்காக அறிகுறிகளை ஆர்வத்துடன் கண்டறிந்து, பெருந்தன்மையுடன் அவற்றை ஆதரித்துஊக்குவிக்கவேண்டும்,

இது தொடர்பாக நாம் இன்று ஒரு விசேட நிகழ்ச்சியைக் கொண்டாடுகிறோம். இது திருச்சபையின் வரலாற்றில் நிகழ்ந்த ஓர் இறையருட் செயல். அன்று ஓர் இளம் பிரான்சியப் பெண்ணின் வாழ்விலேற்பட்ட ஒரு சாதாரண நிகழ்ச்சியிலிருந்து, ஒரு சவாலாக புதியதொரு காட்சி தோன்றச் செய்தார். மறைபோதக நாடுகளிலுள்ள திருச்சபை தனது தேவைகளை மட்டுமல்லாது அனைத்துலக திருச்சபையின் தேவைகளையும் உணர்ந்துநிற்கும் காட்சிதான் அது. சுதேசமயமாக்குதலின் மூலம் மறைபோதக நாடுகளிலுள்ள திருச்சபை தனது சொந்த பண்பாட்டுச் சூழலில் கண்கூடான உருவெடுக்க வேண்டும் என, அவள் கருதினாள். இந்த சுதேசமயமாக்கல் முதன்முதலில் அதன் குருக்கள், துறவியரில் ஆரம்பிக்கவேண்டும். இத்தகைய நடைமுறை மேன்மேலும் மறைபோதக அழைத்தல்கள் பெருகுவதற்கு வழிசெய்யும் எனவும், இத்திருச்சபைகளும் அனைத்துலக திருச்சபையின் பொது மறைபோதக அலுவலில் பங்குகொள்ள முடியுமெனவும் அவள் உறுதியாக நம்பினாள்.

[illegible]

அநேக மாணவரின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாமலிருப்பதாக ஜப்பான், நாகசாக்கி ஆயராகிய மன்சிஞ்ஞோர் கூசின் அவளுக்கு எழுதிய கடிதமே அவளைச் செயற்படத் தூண்டியது. தனது நெருங்கிய நண்பர்கள், உறவினரை ஒன்று சேர்த்து இத்தகைய வேண்டுகோள்களுக்கு தாராளமாக உதவ வேண்டுமெனத் தீர்மானித்தாள். சுதேச அழைத்தல்களுக்கான புனித இராயப்பர் சபை இவ்விதமே ஆரம்பமாகியது. இது நூறு ஆண்டுகளுக்கு முன், அதாவது 1889 ல் நிகழ்ந்தது.

அவள் ஆரம்பித்த இந்த சபையானது, கடந்த 100ஆண்டுகளில் பல்லாயிரக் கணக்கான அங்கத்தவர்களைக் கொண்ட ஓர் அகில உலக அமைப்பாகி, மறைபோதக திருச்சபை மேன்மேலும் அழைத்தல்களை உண்டாக்கி உருவாக்க உதவும் பொருட்டு அயராது உழைத்து வந்துள்ளது. அங்கத்தவரின் இடையறாத செபத்தினால் மட்டுமல்லாது, அவர்களின் உபசரிப்பினாலும் இது சாத்தியமாயிற்று.

நூற்றுக்கணக்கான சிறிய, பெரிய குருமடங்கள் ஆபிரிக்கா, ஆசியா, லத்தீன் அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு, இந்நிறுவனங்களில் உருவாக்கப்படும் ஆயிரக்கணக்கான குருக்களுக்கு ஆதரவும் தாபரிப்பும் அளிக்கப்பட்டுள்ளது

இலங்கையில் தன்னும் எமது சிறிய, பெரிய குருமடங்கள் அனைத்தும் இச்சபையினால் உதவப்படும்நிதியைகொண்டே நடத்தப் பட்டுவருகின்றன. எமது ஆயர்கள், குருக்கள் அனைவரும், எமது துறவியருட் பலரும் முழுமையாகவோ, அல்லது ஒரு பகுதியாகவோ இச்சபையின் நிதியுதவியைப் பெற்றுள்ளனர். ஜீன் பிகாடின் பணி காரணமாக ஆசியாவிலுள்ள எமது குரு மடங்களிற் சில, பிறநாடுகளுக்கு மறைபோதகராகச் செல்லும் குருக்களைப் பயிற்றி வருகின்றன. மறைவட்டக் குருக்களிற் கூட இன்று பலர் ஆசியாவிலிருந்து ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற தூர இடங்களுக்கு மறை போதகராகச் செல்கின்றனர்.

ஆகவே ஜீன் செய்த செயல் தெய்வாதீனமானதும் தீர்க்கதரிசன நோக்குள்ளதுமாகும், அவளது முயற்சியின் விளைவாக, ஐரோப்பிய மறைபோதகர் அருகிவரும் இந்நாட்களில் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலுமுள்ள மறைபோதக திருச்சபை தனது சொந்தத் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியதாக இருப்பது மட்டுமல்லாமல் பிறநாடுகளுக்கு மறைபோதகரை அனுப்பக் கூடியதாகவுமிருக்கின்றது.

கடந்த 100 ஆண்டுகளைத் திரும்பிப் பார்க்கும் இவ்வேளையில் ஜீனுக்காகவும் அவள் நிறுவிய சபைக்காகவும் நாம் இறைவனுக்கு நன்றி கூற வேண்டும். அவள் முன்வைத்த கருத்துக்களுக்காக, அதாவது பொருள் வளங்களை மட்டுமல்லாது ஊழியர்களையும் பகிர்ந்து கொள்வதற்கு நாம் மேன்மேலும் எம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

தேவ அழைத்தல்களுக்காக நாம் செபிப்பது மட்டும் போதாது. தாராளமனதுடன் எமது குருத்துவ மாணவரையும், புகுநிலைத்துறவியரையும் தாபரிக்கவேண்டும், எமதுகுருக்கள், துறவியருக்காக செபிப்பதுடன், மேன்மேலும் அநேக இளைஞரும் யுவதிகளும் பெருந்தன்மையுடன் ஆண்டவரைப் பின் செல்லும்படி ஊக்குவிக்க வேண்டும்.

ஜீனினால் தாபிக்கப்பட்ட அப்போஸ்தலரான புனித இராயப்பர் சபையின் இந்த நூறாவது ஆண்டிலே நாம் அதன் அங்கத்தவராகச்சேர்ந்து வரப்போகும் ஆண்டுகளிலே நாம் அதன் இலட்சியங்கள் பலனளிப்பதற்காக பாடுபடுவதன் மூலம், நற்செய்தி பரம்புவதற்காக சோர்வின்றி உழைப்போமாக.

"இந்தியாவே, உனது புதல்வர் உனது மீட்பின் திருப்பணியாளராவார்கள்"

(பாப்பு 13 ஆம் சிங்கராயர் -1894)

✶

அறுவடையோ
மிகுதி
வேலையாட்களோ
குறைவு
அறுவடைக்கு
வேலையாட்களை அனுப்பும்படி
அறுவடையின்
ஆண்டவனை
மன்றாடுங்கள்.

(மத். 9:37-38)

✶

வீட்டையோ,
சகோதர சகோதரியையோ
தாய் தந்தையையோ
மக்களையோ நிலபுலன்களையோ
என் பெயரின் பொருட்டுத்
துறந்து விடும் எவனும்
பன்மடங்கு பெறுவான்
முடிவில்லா வாழ்வும்
பெற்றுக்கொள்வான்.

(மத். 19:29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேசக் குருக்களுக்கான புனித இராயப்பர் சபையின் ஆரம்பம்

பழமைச் சிறப்புள்ள நோர்மான்டி

நோர்மான்டி பேர் பெற்ற தேச ஆராய்ச்சியாளர், மாலுமிகள், சந்நியாசிகள், புனிதர்கள் போன்ற பலதரப்பட்ட மக்களைக்கொண்ட பரந்த வரலாற்றுப் பின்னணியையுடைய உன்னத நாடாகும். நவீன கால மறைபோதக பணியிலும் அதற்கு ஒரு விசேட இடமுண்டு. கடந்த சில நூற்றுண்டுகளில் நோர்மான்டியிலிருந்து எண்ணற்ற குருக்களும் துறவிகளும் தூரதேசங்களில் நற்செய்தி பரப்பும் பணிக்குத் தம்மை அர்ப்பணித்துள்ளார்கள்.

மறைபரப்புப்பணி என்னும் குறுகிய களத்திற்குள் நாம் நோக்கினல், திருச்சபையின் மறைபரப்புப் பணியை ஒரு புதிய திசையில் திருப்பிய இருவரின் பெயர்கள் மக்கள் நினைவுக்கு வரும் — புனித பிரான்சிஸ் சவேரியாருடன் அனைத்துலக மறை போதக நாடுகளின் பாதுகாவலியாகிய குழந்தை இயேசுவின் புனித திரேசம்மாள், சுதேசக் குருக்களுக்கான அப்போஸ்தலரான புனித இராயப்பர் சபையின் தாபகரான ஜீன் பிகாட்.

உலகில் அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் அறிந்திருக்கவில்லை. ஆனல் காலத்திலும் விண்வெளியிலும் அவர்கள் வாழ்வில் சந்திப்பு ஏற்பட்டது. அவர்களின் அப்போஸ்தல இலட்சியங்கள் ஒரே வழியில் சென்றன.

குழந்தை இயேசுவின் திரேசம்மாள் 1859ஆம் ஆண்டு அலென்சோண் என்னுமிடத்தில் பிறந்தாள், 1897ல் லிசியோவில் மரணமானுள். லிசியோ நகரத்தவளான ஜீன் பிகாட் திரேசாளின் மரணத்திற்கு பதினன்கு ஆண்டுகளுக்குமுன் பிறந்து, 35 ஆண்டுகளின்பின் அலென்சோணில் இறந்தாள்.

ஜீன் பிகாடின் சகோதரன் அகால மரணமடைந்ததும் இந்த லிசியோ நகரில்தான். பிற்காலத்தில் புனித திரேசம்மாளை பாதுகாவலராகக் கொண்டு விளங்கப்போகும் மறைபோதகப் பணி ஆரம்பிப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது இந்த மரணம்.

முதலில் தொடர்பற்றதாயிருந்தும் பின் தம்மையறியாமலே ஒன்றுடன் ஒன்று இணைந்து தற்கால மறை போதகப் பணியின் வரலாற்றில் மிக அழகிய பகுதியொன்றை எழுதலாயின. ஏறக்குறைய ஒரு நூற்றுண்டின் பின்னர் இதைப் படிக்கும்போது மிகச் சுவாரசியமாக இருக்கின்றது.

தெரிந்துகொள்ளப்பட்ட இந்த இரு ஆன்மாக்கள் மூலம், இறைவன் திருச்சபையின் நன்மைக்காகவும் உலகின் மீட்புக்காகவும் எமக்கு எதைக் கற்பிக்க விரும்புகிறுர் என்பதை நோக்கும்போது இறைவனின் செயலைக்கண்டு வியப்புறுவதும் தாழ்ச்சியையும் நாம் பணி செய்யும் ஆர்வத்தையும் கற்றுக்கொள்வதுமே நாம் செய்ய வேண்டியது.

முதற்படிகள்

தனித்து ஜீன் பிகாட் மட்டுமே புனித இராயப்பர் சபையின் தாபகத்துக்குப் பொறுப்பாக இருக்கவில்லை என்பதை நாம் முதலில் கூறிவிடவேண்டும். அவளது தாயாரான ஸ்டெபனி கோட்டின் டிபிகாட் தான் இறக்கும்வரை இந்தப் பணியில் பங்குகொண்டிருந்தாள். ஆனல் ஜீனை இந்தத் துணிகர முயற்சியின் முக்கிய பங்காளராகவும் உத்தியோக பூர்வமான இயக்குநராகவும் இருந்தபடியாலும், தனது தாயார் இறந்தபின் அதற்கு உயிரையும் ஊக்கத்தையும் அளித்துவந்தபடியாலும், எமது வரலாற்றை சுருக்கமாகக் கூறுவதற்காக ஜீனையே முக்கியமாகக் குறிப்பிடுகிறேம். ஆனல் ஒருவரை விட்டகலாத அவரது நிழலைப்போல, அவளது முக்கிய உதவியாளரான அவள் தாயாரின் உருவத்தையும் அவள் மூலமாக நாம் கண்டுகொள்ளவேண்டுமென்பதை மறந்துவிடுவதில்லை,

"திருச்சபையின் மறைபரப்புப் பணி" என்னும் தீர்மானத் தொகுப்பின் முன்னுரையில் இவ்வார்த்தைகளைக் காண்கின்றேம்.

"இத்திருச்சங்கம் மறைபரப்புப் பணியின் அடிப்படைக் கொள்கைகளை வரையறுக்கவும் எல்லா விசுவாசிகளின் ஆற்றல்களையும் ஒன்று திரட்டவும் விழைகிறது. இங்ஙனம் சிலுவையின் குறுகிய பாதையில் நடந்து, இறைவனின் மக்கள், காலங்களின் ஆண்டவரும் மேற்பார்வையாளருமாகிய கிறிஸ்துவின் அரசை உலகெங்கும் பரப்புவார்கள்; அவருடைய வருகைக்குத் தயார் செய்வார்கள்.

பயனுள்ள எல்லா அப்போஸ்தல அலுவலும் தியாகங்களினுல் முத்திரையிடப்பட்டுள்ளது. தியாகமின்றி மீட்பில்லை. தற்கால மறைபோதக வரலாற்றிலே புனித இராயப்பர் சபையின் ஆரம்பக் கட்டத்தில் காண்பதைவிட, கிறிஸ்தவ தியாகத்தின் வளத்தை உறுதிப்படுத்தும் வேறெந்தச் செய்தியையும் காண்பதரிது.

கேன் நகர நீதிமன்றத்தின் முதல் நீதிபதிகளுள் ஒருவரும் அனுசாரமற்ற கத்தோலிக்கருமான ஜீனின் தந்தை திடீரென இறந்தபோது அவளுக்கு வயது 19.

இதுபற்றி ஜீன் பின்வருமாறு எழுதுகிறுள்.

"எனக்கு 19 வயது நடக்கும்போது திகழ்ந்த என் தந்தையின் மரணம் மற்றெல்லாம் என்னை உலகை நோக்கித்தள்ளிய வேளையில், சோகத்தினல் என்னை ஒதுங்கிக்கொள்ளச் செய்தது. ஆனல் ஒருமாபெரும் இறையருள் என்னைப் பாதுகாத்து உலகையும் அதன் ஆடம்பரங்களையும் கைவிடத் தூண்டியது. எனது துன்பத்தின் மத்தியிலும் செபத்தின் அருள் கிடைத்தது. என்றுமில்லாத முறையில் நான் என் தாயாருடன் ஒன்றித்து அவளுக்கு ஆறுதலளித்தேன்.

23ஆவது வயதில் ஜீன் தனது அன்பை யேசுக்கிறிஸ்துவுக்கே அளிப்பதாக வாக்கு அடையாளமாகவும், தனது துன்பங்களின் மூலம் தந்தையின் ஆத்துமத்தையும் பொதுவாக பிறரையும் மீட்கும்படிக்கும் தனது ஆன்மகுருவின் அனுமதியோடு Marie de la Croix என்னும் பெயரை இரகசியமாக எடுத்துக்கொண்டாள்.

★ ★ ★

## 1986/1987இல் இலங்கையின் சிறிய குருமடங்கள்

1. புனித யூலியன் எமாட் குருமடம், வதுளை
2. புனித சின்னப்பர் குருமடம், சிலாபம்
3. புனித வளனர் குருமடம், கண்டி
4. புனித அலோசியஸ் குருமடம், கொழும்பு
5. புனித பிரான்சிஸ் சவேரியார் குருமடம், காலி
6. புனித மாட்டீனர் குருமடம், யாழ்ப்பாணம்
7. புனித வளனர் குருமடம், திருகோணமலை/மட்டக்களப்பு

பெரிய குருமடங்கள்

1. தேசிய குருமடம் கண்டி,
2. டகாம் செவன கொழும்பு
3. புனித சவேரியார் குருமடம் யாழ்ப்பாணம்

1986/1987இல் இலங்கையில் நடைபெற்ற திருநிலைப்படுத்தல்கள்

அனுராதபுரம்–1, பதுளை-2, சிலாபம்–3, கொழும்பு-8, காலி-5, யாழ்ப்பாணம்-2, கண்டி-3, மன்னர்–1.

மொத்தம்—25

★ ★ ★

## குருமணிகள்

இந்த மணி மலர்கள்
கர்த்தனின் தோட்டத்துக் காலைமலர்கள்
பூசைக்கு வந்த புதுமலர்கள்
கருங்கூந்தல் மீது கணநேரமிருந்து
கருகிப் போவனவல்ல இவை.
கல்வாரிப் பீடத்தின்
காணிக்கை மணமலர்கள்.
இவர்கள்,
மந்தையிலிருந்து தொலைந்து போன
செம்மறிக் குட்டிகளைத் தேடிக் கண்டடையத்
தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயர்கள்.
இயேசுவின் அன்புச் சிறையில்
வாழவந்த ஆயுள் கைதிகள்
கல்லெறிக்குத் தயாரான கனிமரங்கள்
பாளம் பாளமாய்க் கீறிப்போன
சமுதாயத் தரையை இணைத்துக் குளிர்விக்கத்
திரண்டெழுந்த அருள் மேகங்கள்.
அறுவடைக் களத்தில்
அரிவாளேந்தி நிற்கும்
வியர்வையாளர்

★ ★ ★

## நீங்கள் செய்யவேண்டியவை

1. சர்வதேச அப்போஸ்தல சபையான புனித இராயப்பர் சபையில் சேருங்கள்.
2. குருத்துவ துறவற அழைத்தலுக்காகச் செபியுங்கள்.
3. குருக்களின் உருவாக்கத்திற்குப் பணஉதவி செய்யுங்கள்

★ ★ ★

## ஒரே பார்வையில் ...

### உலகமுழுவதிலுமுள்ள சிறிய குருமடங்களும் குருமாணவர்களும் 1986-87

| கண்டங்கள் | தங்கி வாழ்வன | தங்கி வாழாதன | மொத்தம் | தங்கி வாழ்வோர் | தங்கி வாழாதோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| ஆபிரிக்கா | 277 | 4 | 281 | 30, 963 | 224 | 31, 187 |
| ஆசியா | 146 | 28 | 174 | 9, 605 | 1, 309 | 10, 914 |
| அமெரிக்கா | 17 | 45 | 62 | 592 | 1, 499 | 2, 091 |
| ஓசேனியா | 11 | — | 11 | 491 | — | 491 |
| ஐரோப்பா | 1 | — | 1 | 57 | — | 57 |
| மொத்தம் | 452 | 77 | 529 | 41, 708 | 3 032 | 44, 704 |

### உலகமுழுவதிலுமுள்ள பெரிய குருமடங்களும் குருமாணவர்களும் 1986-87

| கண்டங்கள் | தங்கி வாழ்வன | தங்கி வாழாதன | மொத்தம் | தங்கி வாழ்வோர் | தங்கி வாழாதோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| ஆபிரிக்கா | 97 | 3 | 100 | 8, 542 | 41 | 8583 |
| ஆசியா | 59 | 10 | 69 | 6, 198 | 1, 276 | 7, 474 |
| அமெரிக்கா | 8 | 27 | 35 | 402 | 1, 369 | 1, 771 |
| ஓசேனியா | 3 | — | 3 | 237 | — | 237 |
| ஐரோப்பா | 1 | — | 1 | 92 | 2 | 94 |
| மொத்தம் | 166 | 40 | 208 | 15, 471 | 2, 688 | 18, 159 |

### கண்டங்களும் 1986 — 87 இல் நடைபெற்ற திருநிலைப்படுத்தல்களும்

ஆபிரிக்கா 420 ஆசியா 525 அமெரிக்கா 111 ஐரோப்பா [illegible] ஓசேனியா [illegible] மொத்தம் 1057

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள் வாக்கு அறிவோம்

திருமறைப்பணி நிலையம், த. பெ. இல. 2. யாழ்ப்பாணம்.

## சிறிய இறைவாக்கினர்-26 அபக்கூக்-5

இறைவாக்கினர் அபக்கூக் ஆகமத்தில் காணப்படும் கருத்துக்களும், எழுப்பப்படும் கேள்விகளும் இன்னும் சமுதாயத்தில் காணப்படுகின்றன. இறைவன் நீதியுள்ளவர், நேர்மையுள்ளவர், எல்லாம் வல்லவர், நன்மைத்தனம் நிறைந்தவர். இத்தகைய இறைவன் ஏன் தீயவர்களைச் செழித்தோங்க விடுகின்றார்? அநீதி புரிபவர்களை அவர் தண்டிப்பதில்லை? மாறாக நேர்மையானவர்கள், நல்லவர்கள் கொடுமைப்படுத்தப்படுகின்றனர். துன்பங்களுக்குள்ளாகின்றனர். இத்தகைய கேள்விகள் இன்று தனிமனித வாழ்விலும், சமூக வாழ்விலும் எழுப்பப்படும் கேள்வியாகும்.

இறைவாக்கினர் அபக்கூக் இக்கேள்வியுடன் மேலும் ஓர் கேள்வியை எழுப்புகின்றார். யூதாவைச் சேர்ந்தவர்கள் குற்றம் புரிந்தவர்களாக இருந்தாலும் அவர்களைவிடத் தீயவர்களும் அந்நியர்களுமான பாபிலோனியர்களால் ஏன் தமது மக்களான யூதா மக்கள் தண்டிக்கப்படவேண்டும்? இது இறைவனது நீதிக்கு ஏற்றதா? என முறையிடுகிறார். இது அவருக்கு ஒரு பெரும் பிரச்சனையாக உள்ளது.

இப்பிரச்சனைகள் எம் அறிவிற்கு அப்பாற்பட்டதாகவே எக்காலத்திலும் இருந்து வருகின்றது. சாதாரண மனிதநீதியின் படிகண்ணோக்கின் புரிந்து கொள்வது கடினமானது. வாழ்வின் எல்லாக் கேள்விகளுக்கும் மனிதநீதியில் விடைகண்டு விடமுடியாது. இறைவாக்கினர் அபக்கூக் எழுப்பிய கேள்விக்கு உடனடியாகப்பதில் கிடைக்கவில்லை. "ஆண்டவரை எதிர்பார்த்துக் காத்திரு" என்று இறைவாக்கினர் எழுப்பிய பிரச்சனைக்குப் பொறுமையற்றவர்கள் உடனடியான பதிலை எதிர்பார்ப்பார்கள். ஆனால் அவற்றிற்கு நிறைவான பதில் நீண்டகாலத்தின் பின்புதான் தெளிவாகும்.

நமது வாழ்வில் பல பிரச்சனைகள் எழலாம். அவற்றின் பொருளைக்கண்டுணர வெகுகாலம் காத்திருக்க வேண்டும். இறைவனின் திருவுளம் எது என அறிய இறைவனைப்பற்றிக் கொண்டு விசுவாசத்துடன் நிலைத்துநிற்கவேண்டும் இறைவனின் நன்மைத்தனத்தில் நம்பிக்கை கொண்டு காத்திருக்க வேண்டும்.

கி. சா. பங்கிராஸ்

அறிந்துகொள்ளுங்கள் 81

## ஏன் பாலையில் நாற்பது வருடங்கள்

சீனாய் மலையடிவாரத்தில் இஸ்ராயேல் மக்கள் ஓர் ஆண்டு தங்கினர். இக்காலம் அம்மக்கள் ஒரு சமய அரசியல் அமைப்புப் பெற உதவிய காலமாகும். ஆனால் பாலைப் பயணத்தில் பல கிளர்ச்சிகள் தோன்றியதாக எண்ணாகமம் கூறுகின்றது. மக்கள் யாவேயுடன் செய்து கொண்ட உடன்படிக்கை கட்டாயத்தாலோ பயத்தினாலோ செய்து கொண்டதல்ல "ஆண்டவர் சொன்னபடி யெல்லாம் செய்வோம்" (யாத் 24:7) என்று மக்கள் விரும்பிதன்னுரிமையுடன் செய்து கொண்டது. எண்ணாகமத்தில் முணுமுணுத்தனர் முறையிட்டனர் என்ற வார்த்தைகள் அடிக்கடி காணப்படுகிறது.

காதேசில் பல ஆண்டுகள் மக்கள் தங்கினர். இங்கிருந்து கானான் நாட்டை தெற்கிலிருந்து கைப்பற்ற விரும்பினார் மோயீசன். இதற்காக கானான் நாட்டை உளவு பார்க்க ஒற்றர்களை அனுப்பினர். ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒவ்வொருவராக 12 பேர் அனுப்பப்பட்டனர். இவர்கள் கானான் நாடு முழுவதையும் சுற்றிப்பார்த்து 40 நாட்களுக்குப் பின் திரும்பி வந்து மக்களுக்கும் மோயீசனுக்கும் நாட்டைப்பற்றிக் கூறினர். இவர்களில் யோசுவாவையும் காலேபுவையும் தவிர ஏனையோர் கனானியர்களைப்பற்றி பயங்கரக்கதைகளை கூறி மக்களைக் குழப்பிவிட்டார்கள். இதனால் இஸ்ராயேலர்களிடையே கானான் நாட்டைக்கைப்பற்றுவது முடியாத காரியம் என்ற அச்சம் வளர்ந்துவிட்டது. ஆனால் உண்மையை சொன்ன இருவரையும் விட மக்கள் பொய் சொன்னவர்கள் சார்பாகவே இருந்தனர்

இதனால் மக்களுக்குள் கிளர்ச்சி எழுந்தது. மோயீசனுக்கு எதிராக ஒரு புதியதலைவனை ஏற்படுத்திக் கொண்டு எகிப்துக்கு போவோம் என்று கூறினர் (எண் 14: 1—4). யாவே அவர்களை அழிக்க விரும்பினார் ஆனால் மோயீசன் வேண்டுதலால் அமைதியடைந்து குற்றம் செய்த கிளர்ச்சி செய்த யாவரும் வாக்களிக்கப்பட்ட நாட்டுக்குப்போக மாட்டார்கள் என்று தண்டித்தார். இந்த அவமதிப்பற்ற செயலுக்காக 40 ஆண்டுகள் பாலை வனத்தில் அலைந்து திரிய வேண்டும் என்பது தண்டனை. கிளர்ச்சியாளர் கானானையர்களையும் அமலேக்கியர்களையும் தாக்க முற்பட்டனர் ஆனால் ஓர்மா என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டனர்.

இதன்பின் ஒரு பணிவுள்ள தலைமுறை உருவாகி வரும் வரை காதேச்சை சுற்றியுள்ள பகுதியில் தங்க மோயீசன் முடிவெடுத்தார். சிலரின் கருத்துப்படி எகிப்திலிருந்து புறப்பட்டவர்களில் யோசுவாவையும் காலேபையும் தவிர வேறு ஒருவரும் கானான் நாட்டிற்கு போகவில்லை.

—இ. ம. ஜெயசீலன்

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்.

அன்பின் வாசக நேயர்களே!

நாம் சமூகத்திலே 'வேடம்' போடுகின்றவர்களாக, எமது உண்மை முகத்தை மறைத்து வாழுகின்றவர்களாக, போலி வேடம் இட்டு நமது சமுதாயத்தை கெடுத்து வாழுகின்றோம்! இல்லையா?

இதற்கு நம் முன்னோர் எச்சரிக்கின்ற வார்த்தை- "முப்பழமொடு பால் அன்னம்- முகம் கடுத்திடுவராயின்- கப்பிய பசியினோடு- கடும்பசி ஆகும் தானே" உண்மை தானே! நாம் முகத்திற்கு முன்னால் ஒரு முகமும், முதுகிற்குப் பின்னால் இன்னொரு முகமும் காட்டுகின்றவர்களாக வாழ்கின்றோம். இது நம்ப முடியாவிட்டாலும்- நம்பித்தான் ஆக வேண்டும். என்ற உண்மையை நானும் நீங்களும் பகிருவோமா?

17/14 இல் திருநூல் ஆசிரியர் "சச்சரவுக்குக் காரணமானவன் தண்ணீரைத் திறந்துவிடுகின்றவன்போலாம். அவன் நிந்தைப்படு முன்பே நியாயத்தைக் கைநெகிழ்கிறான்."

இறைவார்த்தை பொருத்தமாக அமைகின்றது இல்லையா? இன்னொன்றையும் கூறுகிறேன்! பொருத்தம் சரியா பிழையா என்பதை நீங்களே தீர்ப்பிடுங்கள்.

17/15இல் "குற்றவாளியைக் குற்றமற்றவனென்றும், குற்றமில்லாதவனைக் குற்றவாளியென்றும் தீர்ப்பிடுகிறவர்கள் கடவுளின் வெறுப்புக்கு ஆளாகிறார்கள்"

இதற்கு நம்மூர்க் கவிஞர் இடித்துரைக்கும் பதில் "சட்டம் ஏமாந்து போனாலும் போகும் தர்மம் எப்போதும் பழிவாங்கியே தீரும்" என்று எவ்வளவு ஆணித்தரமாக கூறி வைக்கிறார் பார்த்தீர்களா? இறைவன் ஒவ்வொரு கலைஞனையும் படைப்பாற்றல் மிக்கவனாக செயல்படுத்துகின்றார். இதிலே புதைந்து கிடக்கின்ற மறை உண்மைகளை நீங்களும் நானும் தேர்ந்து தெளிய வேண்டிய ஒன்று!

இன்னொன்றையும் நமது சிந்தனைக்கு எடுப்போமா? எம்மை நேசிப்பவர்கள் எமது துன்ப துயரத்தில் உதவக் கூடியவர்கள். யார் என்பதை நாங்கள் இனம் கண்டு கொள்ள முடியாமல் இருக்கின்றோம்! ஆனாலும் ஆழமான சிந்தனையோடு நம் முன்னோர் உரைக்கின்ற முதுமொழி "அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்," என்ற சொல்லுக்கு திருநூல் ஆசிரியர் 17/17 இல் "நண்பன் எக்காலமும் நேசிக்கிறான். துன்பத்திலேயும் சகோதரனாவான்."

ஒப்பிட்டுப் பார்க்கும் போது உள்ளம் புல்லரிக்க செய்கின்றது அல்லவா?

தொடர்ந்தும் ஒப்பீடு செய்து பார்ப்போமா? உங்கள் விமரிசனங்கள் எங்களுக்குத் தேவை.

★

### வாரம் ஒரு சிந்தனை

"இருளில் கண்களை மூடாதவன்- ஒளியைக் காண்பான்"

அன்புடன்
எஸ். எ. நாதன்.



# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 3<br>கதிர்: 24 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

### வாரம் ஒரு வார்த்தை

ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் அருள் உங்களோடு இருப்பதாக.

பிலிப்பியர் 4: 23.

எவ்வேளையிலும் இவ்வார்த்தையைப் பகிர்ந்து கொள்ளுங்கள், உள்ளத்தின் ஊமைக் காயங்கள் குணமாகும், உள்ளம் உறுதிபெறும்.

பேசும் விழி.

அன்பின் கண்மணிகாள்!

குழந்தை யேசுவின் அன்புக்கரம் என்றும் உங்களை வழி நடத்தும். செபத்தின் அவசியத்தைப்பற்றி நான் பல தடவைகள் இங்கே எழுதியுள்ளேன். மீண்டுமொருமுறை செபத்தின் மகத்துவம் பற்றி நினைப்பூட்ட விரும்புகிறேன். பாத்திமா அன்னை குழந்தை மூவருக்கும் 1917 மே மாதம் 13 இல் தோன்றி உரைத்த உரை என்ன?

கடவுளை நோகச் செய்யும் பாவங்களுக்குப் பரிகாரமாகவும், பாவிகள் மனம் திரும்பும்படி மன்றாட்டாகவும் அவர் உங்களுக்கு அனுப்பும் எல்லாத்துன்பங்களை அவருக்கு ஒப்புக்கொடுக்க நீங்கள் விரும்புகிறீர்களா?

இதற்கு மூவர்சார்பாகவும் 'ஆம்' என்று பதில் கூறினள் லூசியா, "அப்படியானால் நீங்கள் அதிகம் துன்பப்பட நேரிடும். ஆனால் கடவுளின் வரப்பிரசாதம் உங்களைத் தேற்றும்," என்றாள் அன்னை இதைச் சொன்னதும் அவள் தன் கரங்களை விரித்து ஒரு தெய்வீக ஒளியைக் குழந்தைகள் மீது பாய விட்டாள். அத்துடன் அவர்களுக்கு ஓர் அந்தரங்க ஏவுதலும் வழங்கப்பட்டது. உடனே அவர்கள் மூவரும் முழந்தாளிட்டு;

"ஓ மிகவும் பரிசுத்த திரித்துவமே உம்மை ஆராதிக்கிறேன். என்தேவனே! மிகவும் திவ்விய நற்கருணையில் உம்மை நேசிக்கிறேன்."

என்று சொல்லிச் செபித்தனர். குழந்தைகளின் செபம் முடிந்ததும் அன்னை,

"உலகிற்குச் சமாதானம் பெற்றுக் கொள்ளவும் யுத்தம் முடிவடையவும் தினமும் செபமாலை சொல்லுங்கள்,"

என்று கூறிவிட்டு ஒளியிலே கலந்து மறைந்தாள்.

அன்னை அன்று சொன்னவைகள் இன்று இங்கு எமக்குச் சொல்வதாக நினைத்துச் செபிப்போமாக.

அன்பின்
அன்பு வழி.

## நீ எழுக பணிபுரிய

அழிகின்ற அவனியிலே
அயலவருக்காய் நீ உழைக்க
ஆண்டவரின் அன்பு மகன்
ஆவலுடன் உனை அழைக்க,
புனிதமாம் அவர் பெயரை- இப்
புவியின்லே பரப்பிட
பாரினிலுள்ள பாவிகளை
பரமனிடம் சேர்த்திட
சிலுவையினால் சிறியவர்களை
திரும்பவும் சேர்த்திட
மனிதரையெல்லாம் இறைவனின் அன்பை
மகிழ்வாய் ஏற்கச் செய்ய
இறைவனின் இரக்கத்தினை
இவ்வுலகில் விளக்கிட
இறைவனின் வார்த்தை இறப்பற்றவையென
என்றும் உரைத்திட
நிலையற்ற உலகில்
நீதியினை தளிர்க்கச்செய்ய
நித்திய கடவுள் உனை அழைக்க
நீ எழுக பணிபுரிய.

வெ. யூஜின்
அங். இ. A/10

### அங்கத்துவம்

171. ம. ஜெஸ்ரின் ஜெயராஜன் ஆண்டு 7
மன்/நானாட்டான் ம. வி.

172. ம. யூஜின் கிறிஸ்து ராஜன் ஆண்டு 9
மன்/நானாட்டான் ம. வி.

173. ம. யஸ்ரின் உதயராஜன் ஆண்டு 11
மன்/நானாட்டான் ம. வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறம் மாறும் அகதிகள்

அருளானந்தம் ஓவசியரை தெரியாதவர்கள் அந்த ஊரிலே யாருமேயில்லை. அவ்வளவு பிரபல்யமான செல்வச் செழிப்போடு வாழ்ந்த ஒரு மனிதர். அதுவும் P.W D. (பி. டபிள்யு. டி) ஓவசியர் என்றால் சொல்லத்தான் வேண்டுமா? ஒரு காலத்திலே அவர் செல்வாக்கோடு பணம் புரண்ட காலத்திலே அந்த ஊரிலேவிரல்விட்டு எண்ணக்கூடிய பணக்காரர்களில் அவரும் ஒருவர். முதன் முதல் அவ்வூரில் கல்வீடு கட்டிய பெருமை அவரையே சாரும். அவருக்கென்று சொந்தமாக வயற்காணிகளும் தரிசு நிலங்களும் அவ்வூரிலே பரந்து கிடந்தன.

இந்த நிலபுலன்களுக்கெல்லாம் வாரிசுகளாக உரிமை கொண்டாட ஐந்து பிள்ளைகளுக்கு தந்தையாகியிருந்தார். முதல் நான்கு பிள்ளைகளும் பெண் பிள்ளைகளாகிவிட்டதால் கடைக்குட்டியான மகன்மீது அதிக பாசம்கொண்டிருந்தார். மகனை எப்படியாவது படிப்பித்து டாக்ரராக்கிவிடவேண்டும் என்ற எண்ணம் அவர் சிந்தனையில் முளைவிட்டிருந்தது. நான்கு குமர்களையும் நல்ல சீதனம் கொடுத்து திருமணம் செய்துவைத்த நிலையில் அவரது சிந்தனை முழுவதும் தன்னுடைய மகனைப் பற்றியதாகவேயிருந்தது.

அவருடைய ஒரே வாரிசான ஜெகநாதனும் உயர்தர வகுப்புப் படித்துவிட்டு பரீட்சைப் பெறுபேறுகளுக்காகக் காத்துக்கொண்டிருந்தான். எப்படியாவது மகன் சித்தியடைந்து பல்கலைக்கழகத்தில் மருத்துவப் படிப்பிற்கு எடுபட்டுவிடுவான் என்ற நம்பிக்கை மனதில் ஆழமாக வேர்விட்டிருந்தது. அப்படி தெரிவுசெய்யப்படாத நிலையிலும்கூட வேறுநாட்டிற்கு அனுப்பியாவது அவனை டாக்ரராக்குவதற்கு தேவையான பணம் அவரிடம் நிறைய இருந்தது.

ஆனால் அடிக்கடி அவர் கிராமத்தில் நடந்த திடீர் இராணுவ சுற்றிவளைப்புகளும் கைதுகளும் அவருடைய மகனைப் பற்றிய எதிர்கால நம்பிக்கைகளைச் சிதறடிப்பது போலிருந்தது. இப்புதிய பிரச்சினையால் மகனின் எதிர்காலத்தைவிட மகனின் பாதுகாப்பே முக்கிய பிரச்சினையாக அவருக்குத் தென்பட்டது. இராணுவசுற்றிவளைப்புக்களில் எனது மகன் கைதுசெய்யப்பட்டுக் காணமற்போனால்...! அதைப் பற்றி நினைக்கவே அவருக்கு தலைவெடிக்கும்போலிருந்தது. அப்படியொரு இழப்பைச் சந்திக்க நேர்ந்தால் நிச்சயமாக அவரால் தாங்கிக்கொள்ள முடியாது. அவர் மகனைப் பற்றி எதிர்காலக் கனவுகளெல்லாம் கரைந்து கலைந்துபோனால் அவர் வாழ்வே சூனியமாகிவிடும். அவரின் பெயர் சொல்லப் பிறந்த வாரிசே காலவாரிவிட்டான்!

✻✻✻✻✻✻✻✻✻✻✻

றேகான் ஸ்ரனி அன்ரனி
உயிலூர்

✻✻✻✻✻✻✻✻✻✻✻

அருளானந்தம் ஓவசியரால் அதை நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. மகனைப் பற்றிய எதிர்காலக் கனவை இலட்சியத்தை ஒதுக்கிவைத்துவிட்டு உடனேயே செயற்பட்டார். தனக்குத் தெரிந்த அறிமுகமான ஒரு ஏஜென்சியை அணுகினர்.

'ஓவசியர், இப்ப ஜேர்மனிக்கு போறதெல்லாம், சரியான பிரச்சினை. எல்லையைக் கள்ளமாக கடப்பது எல்லாம் கஷ்டம்தான். அதனால உங்க மகனை அனுப்ப அதிக செலவாகும்.''

'செலவைப் பற்றி நீங்க கவலைப்படாதீங்க. என்ரமகனை எப்படியாவது பாதுகாப்பாக அனுப்பினீங்கள் எண்டால் அதுவே எனக்குப் போதும். என்ர மகன் இங்கிருப்பதிலும் பார்க்க அங்கு உயிரோடு இருந்தாப்போதும். உடனேயே எப்படியாவது ஏற்பாடு செய்யுங்க'' என்று அழாக்குறையாக ஓவசியர் கெஞ்சினர்.

போதும் கொடுப்பதற்கு பின் வாங்குவார்.

ஒரு முறை அவரது ஊருக்கு அகதிகளாக இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கு உதவி செய்யப்பணம் திரட்டிய போது அவர்கையை விரித்துவிட்டார். ''இவங்களுக்கெல்லாம் உதவி செஞ்சா நாம நடுறோட்டில தான் நிற்க வேண்டிவரும்'' என்று அவர் சொன்னாலும் மகன் அனுப்பும் அகதிப்பணத்தில்தான் இப்போது அவர் காலம் தள்ளுகின்ருர் என்பதை நினைத்த

## சிறுகதை

எப்படியோ ஏஜென்சி மூலம் மகனை ஜெர்மனிக்கு அனுப்பிவிட்டதில் அவருடைய மனம் கொஞ்சம் ஆறுதலடைந்தது. அவரிடமிருந்த நிலபுலன்களையெல்லாம் சீதனமாக பெண் பிள்ளைகளுக்குக் கொடுத்துவிட்டிருந்ததால் அவர் குடியிருந்த வீடும் அதனைச் சுற்றியுள்ள காணித் துண்டுமே அவருக்கு இப்போது சொந்தமாகவிருந்தது.

இளைப்பாற்றிச் சம்பளத்தில் ஒண்டிக்கட்டையாகத் தனியாக இப்போது காலம்தள்ளிக்கொண்டிருந்தார். மகனைப் பிரிந்து வாழ்வது அவர் முதுமையில் கொஞ்சம் தாக்கத்தை ஏற்படுத்தினலும் மகன் உயிரோடிருப்பதே அப்போதைக்கு அவருக்கும் போதுமாகத் தென்பட்டது.

அண்மையில் மகன் போட்டிருந்த கடிதம் கவலையை அவர் அவர் உள்ளத்தில் எழுப்பிவிட்டிருந்தது. அகதி முகாமில் இருப்பதாகவும் குளிரும் சாப்பாடும் தனக்கு ஒத்துவருவதில்லையென்று எழுதியிருந்தது அவர் நெஞ்சில் பாரமாக இறங்கியது! தருகின்ற அகதிப் பணத்தில் மிச்சம் பிடித்து அனுப்புவதாகவும் எழுதியிருந்தது அவருடைய மனத்தினுள் நெருடலை ஏற்படுத்தியது.

டாக்டராகத்தான் மகனை ஆக்கமுடியாவிட்டாலும் மகன் வெளிநாட்டில் இருக்கிறான் என்பதை பெண்ணி பெருமைப்பட்டுக் கொள்வார். அவருடைய நண்பர்கள் மகனைப்பற்றிய பேச்செடுத்தால் அவன் வெளிநாட்டில் கம்பனி ஒன்றில் வேலைபார்ப்பதாகச் சமாளித்துவிடுவார் ஆனால் மகன் அகதியாக வாழ்வது அவர் நெஞ்சிற்கு மட்டும் தெரிந்த உண்மை என்பதை அவர் அறிவார்.

வெளிநாடுகளில் வாழும் பலர் போதைவஸ்து கடத்தலில் ஈடுபட்டு பெருந்தொகைப் பணத்தை ஊருக்கு அனுப்பி அதில் ஊரிலுள்ளவர்கள் ஆடம்பரமாக வாழ்வதும் எல்லோரும் அறிந்த உண்மையே! அருளானந்தம் ஓவசியரின் மனம் மட்டும் பரந்ததாக இருக்கவில்லை. இவ்வளவு செல்வச் செழிப்பாக வாழ்ந்த

போது அவர் நெஞ்சிலே நெருஞ்சி முள் தைப்பது போன்ற குற்ற உணர்வில் தடுமாறவும் செய்தார்.

அன்றொரு நாள் அவர் வாழ்க்கையில் நடந்த அந்த எதிர்பாராத சம்பவம் அவரை நிலை குலையச் செய்து விட்டது. திடீர் இராணுவ மோதலில் அவரது வீடு ஷெல் அடிக்கு இலக்காகி உடமைகளெல்லாம் இழந்து இன்னொரு ஊரில் கோயிலில் அவர் அகதியாக அடைக்கலம் தேடவேண்டியதாயிற்று.

அந்த கோயிலில் சமத்துவம் தாராளமாக உலவியது. ஏழை, பணக்காரன் என்ற பேதத்திற்கே அங்கு இடமிருக்கவில்லை. ஆனால் ஓவசியருக்கோ இப்படி ஏழை எளியவர்களோடு சமமாக உட்கார்ந்து சாப்பிட அவர் கௌரவமும் மனமும் இடம் கொடுக்கவில்லை வெளியே போகவும் முடியாது, உள்ளே இருக்கவும் முடியவில்லை என்ற வேதனையில் கோயில் சுவர் ஓரத்தே தனிமையில் சாய்ந்து கொண்டிருந்தபோது எதிரே அவர் வீட்டில் எடுபிடி வேலைசெய்த மரியதாசைக் கண்டார்.

''ஓவசியர் ஐயா! என்ன நீங்களும் இங்கேயா! என்ன செய்வது? ஐயா சமுதாயத்தில் காணமுடியாத சமத்துவத்தை, இந்தப் பிரச்சினை எப்படியோ எங்களிடையே வளர்க்கப்பாக்குது. ஆனா, இதெல்லாம் தற்காலிகமானது எண்டு எனக்குப்படுகுது. இந்தப் பிரச்சினையால நாங்க எல்லோரும் அகதிகளாக மாறினலும், எண்ணைத்த பணக்காரங்க ஏழைகளை சமுதாயத்தில் மதிச்சு மரியாதையோட நடத்துறாங்களா? அதைத்தான் எங்க எல்லாருக்கும் விடுதலை. அந்த மனப்பக்குவம் எப்ப சமுதாயத்தில் வருகுதோ அப்பதான் எங்கட சமுதாயம் விடுதலை பெறத் தகுதி பெறும்'' என்று அவன் சொரிந்து தள்ளிய போது ஓவசியரால் தலைகுனிவதைத்தவிர வேறுவழிதெரியவில்லை.

ஆனால் அவர் மனதில் மட்டும் அவன் சொன்ன உண்மை ஓரளவு நியாயமாக புரியத் தொடங்கியது.

(யாவும் கற்பனையல்ல)

---

# தேனருவி

## திருப்பு முனை

ஆண்டின் 13ம் ஞாயிறு (02–07–89)

டெய்சி மென்டஸ் என்ற பெண்மணி ஓர் ஆசிரியையாகக் கடமையாற்றியவள். இவள் ஒருநாள் நோயாளி ஒருவரின் துன்பத்தைக் கண்டாள். புற்று நோயால் முகத்தில் பாதி தின்னப்பட்ட நிலையில் துடித்துக் கொண்டிருந்த அந்த நோயாளியை நடைபாதையில் பார்த்தாள். அதுவே அவளது வாழ்க்கையின் திருப்புமுனை. தன் ஆசிரியத் தொழிலைத் துறந்தாள். 1951 முதல் இன்றுவரை புற்றுநோயாளிகளின் பராமரிப்பிற்காகத் தன்னை அர்ப்பணித்து வாழ்கிறாள். அந்த நோயாளியைப் பார்த்ததே அவளுக்குக் கடவுளின் அழைப்பாக இருந்தது.

அரசர் ஆகம முதல் புத்தகத்தில் எலியாஸ் இறைவாக்கினார் எலிசேயுவை அழைக்கும் வரலாறு உண்டு. பன்னிரு ஏர் பூட்டி உழுத எலிசேயு ஒரு சாதாரண தொழிலாளியல்ல. பல சொத்துக்களுக்கு உரிமை கொண்ட பணக்காரன். ஆயினும் எலியாஸ் இறைவனின் உண்மையான இறைவாக்கினர் என்பதனால் அவரது குரலில் இறைவனைக் கண்டார் அனைத்தையும் துறந்து பணிவிடை புரியப் புறப்பட்டார். ஏர் மாடுகளை உணவாக்கி கலப்பையை விறகாக்கி பழையன கழித்துப் புதியன புகுந்தார்.

நற்செய்தியில் மூன்று விதமான அழைப்பின் குரல் கேட்கிறது. முதலில் வருபவன் தானாக முன்வந்தாலும் பெரும் செல்வச்செழிப்பும், உணர்ச்சி வசப்பட்ட வாழ்வு அல்ல. சீடத்துவம் என்பதை உணர்த்த '' மனுமகனுக்குத் தலைசாய்க்க இடமில்லை'' என்று முழுமையான அர்ப்பணத்தை விலையாக்குகிறார் மற்றைய இருவரும் இயேசுவின் அழைப்பை ஏற்றாலும் – சிறு தயக்கம், ஒரு நிபந்தனை, காலந் தாழ்த்தும் தன்மை – இவற்றின் மத்தியில் இயேசுவின் குரலில் கடுமையும், கண்ணியமும், கட்டுப்பாடும் கலந்து நிற்கின்றன.

அடிமைத்தனத்திற்கும், சாவுக்கும், அழிவுக்கும் பாதை விரிந்தது, சுலபமானது. சவால்கள் அறவே இல்லை எனலாம். ஆனால் உரிமை வாழ்வின் ஒடுக்கமானது. கடினமானது அதனால் சீடத்துவ அழைப்பு சவால்கள் நிறைந்தது. அடியெடுத்து வைப்பவர் திரும்பிப் பார்க்கக் கூடாது என்பதால் '' அடிப்படைத் தீர்மானம் '' ஒரு நிரந்தரமான திருப்புமுனையாகும்.

புனித சின்னப்பர் தம் பழைய வாழ்வை முற்றும் துறந்து புதிய வாழ்வை அணைத்துக் கொண்டமையால் கலாத்து நகரில் வாழ்ந்த கிறிஸ்தவரை அடிமைத்தனத்தின் நுகத்தைத் திருப்பவும் ஏற்காதீர் எனக் கண்டிக்கிறார்.

நாம் இன்று எடுக்கும் தீர்மானங்களும், கொடுக்கும் உறுதி மொழிகளும் அரைகுறையானதும், நிலையற்றதும்.

வரலாற்றில் பலர் வாழ்வின் திருப்புமுனைகளை உற்று நோக்குங்கள்

தெரு ஓரங்களில் செத்துக்கொண்டிருந்த ஏழைகள் அன்னை திரேசாவிற்கு ஒரு திருப்பு முனை தொழுநோயாளனின் துடைப்பத்தில் புனித டேமியனுக்கு திருப்புமுனை சாவதற்குத் தீர்ப்பிட்ட கைதியின் குமுறலில் புனித மாக்சிமிலியன் கோல்பேயின் திருப்புமுனை அமைந்தது. நான் வாழும் வாழ்வு, ஆண்டவரின் அழைப்பு வாழ்வா? அவ்வழைப்பு எப்படி வந்தது? அன்று ஒரு குறிக்கோளை நோக்கித் திரும்பிய எனது வாழ்வு, எப்படித் தொடர்கிறது? எனது இன்றைய நிலையைக் காணும் இயேசு எனக்கு என்ன கூறுவார்?

சுவாமி ஜீவா போல் அ. ம. தி.

---

அரு. 19: 16, 19-21 எலிசேயு புறப்பட்டுப் போனார்
கலா. 5: 1, 13-18 உரிமை வாழ்வுக்கு அழைக்கப்பட்டீர்கள்
லூக். 9: 51-62 என்னைப்பின் செல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## அதிபருடன்...

வேண்டும். அதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. 2-ம் வத்திக்கான் சங்கத்தின் பிற்பாடு வழிபாட்டு முறைகள், அவற்றை விளக்கும் தன்மை மொழி, செயற்பாடுகள் பாடல்கள் ஆகியன மாற்றம் அடைந்துள்ள வண்ணமுள்ள எமது கலாச்சார அம்சங்கள் உட்புகுத்தப்படுகின்றன. வழிபாடுகள் தமிழிலும் மக்களின் கூடிய பங்களிப்போடும் நடைபெறுகின்றன. பங்குகளில் பலதரப்பட்ட ஏராளமான மக்கள் ஞாயிறு வழிபாட்டில் பங்கு கொள்வதால், அர்த்தமும் பங்களிப்பும் கூடிய திருப்பலியை தந்தையர், தாய்மார், சிறுர்கள், ஒரே தொழிலில் ஈடுபடுபவர்கள் போன்ற சிறு குழுக்களுடன் இணைந்து அவர்களுக்குக் கருத்துக் கொடுக்கும் விதத்தில் வேறு நாட்களில் நடத்தப்பட வேண்டியிருக்கிறது. சிறு குழுக்களுக்கான திருப்பலிகள் இங்கே இடம் பெறுகின்றன. இடையிடையே 7—8 மாணவர்களுடன் ஒரு குரு சேர்ந்து தமது வாழ்க்கையோடு ஒட்டிய தியானமும் அதோடு இணைந்த திருப்பலிக் கொண்டாட்டம் நடத்துகின்றனர்.

கேள்வி: இத்தாபனத்தை கொண்டு நடத்துவதற்குத் தேவையான நிதி வசதிகள் ஆட்களைப் பெறுவதில் ஏதாவது சிரமம் உண்டா? இருப்பின் எவ்வாறு மேற்கொள்கிறீர்கள்.

பதில்: குருமடம் தொடங்கிய காலத்தில் முன்னர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியாகப் பாவிக்கப்பட்ட இப்பெரிய காணியும் கட்டடங்களும் கிடைத்தமை அதிஷ்ட வசமானது. எனக்கு முன்னர் அதிபராயிருந்த அருள்திரு பொன்னையா அடிகளார் சில கட்டடங்களை மிக விரைவில் கட்டினார். நான் பொறுப்பேற்ற பின் மேலும் சில கட்டப்பட்டன. எமது குருமடம் அங்கீகரிக்கப்பட்ட பின் சுதேச குருக்களுக்கான அப்போஸ்தலர் இராயப்பரின் சபையும், மிஸ்சியோ என்ற ஜேர்மன் அமைப்பும் நிதிவசதி தருகின்றன. மேலும் குருக்களைப் பயிற்றும் பணிக்கு நிதி உதவி செய்ய எம் நாட்டவரும் சிலர் முன்வந்து எமது ஆயருடன் தொடர்பு கொண்டுள்ளனர். இப்படியான பணப் பான்மையுள்ள மேலும் பலர் முன்வர ஊக்குவிக்கப்பட வேண்டும். குருமடச் செலவுகளுக்காக ஒரு ஒரு நிதியை எமது ஆயரும் தேசிய மறைபரப்பு இயக்குனரும் ஆரம்பித்துள்ளனர். உதவி செய்ய விரும்புவோர் ஆயர் மூலம் உதவலாம்.

கேள்வி: குருமட மாணவர்களைத் தனிநபர்கள் தத்தெடுத்து உதவுவதுபற்றி உமது கருத்தென்ன?

பதில்: யாரேனும் உதவி செய்ய விரும்பினால் ஆயர் மூலம் உதவுவதையே விரும்புகிறோம். குரு மாணவனுக்கும், அவருக்கு உதவுபவருக்கும் இடையே நேரடித் தொடர்பு ஏற்படுவது விரும்பத்தக்கதல்ல. பொது நிதியிலிருந்து உதவப்படும்போது மாணவர்கள் கடமைப்பாடுகளுக்கு உள்ளாவதில்லை.

அ. சந்தியாப்பிள்ளை

## விண்ணக வாழ்வின் 1ம்-வருட நினைவஞ்சலி



திரு. S. K பீற்றர்

(மாதகல்)

மலர்வு: 29-11-1896

உதிர்வு: 28-06-1988

எமைப்பிரிந்து போனபின்னே
ஓராண்டு சென்றாலும்
இதயத்தில் நிலைகொண்ட
இனியவனே! உத்தமனே!
இறையருளால் உன்னன்மா
நித்தியமாய் பரகதியில்
இளைப்பாற வேண்டிநிற்கும்

மனைவி, மக்கள், மருமக்கள், பேரர்மார், உறவினர்கள்,

## விண்ணக வாழ்வின் 19-ம் ஆண்டு மலர்வு



மிரியம் சாமினி சில்வெஸ்டர்

அன்னையின் மடியில்
06-10-1962
ஆண்டவன் அரவணைப்பில்
26-06-1970

ஆண்டுகள் பத்தொன்பதாகியும் நின் நினைவுகள் எம் நெஞ்சங்களை நனைக்கின்றன.

பிரிவால் துயருறும்

பெற்றோர், சகோதரர்கள், உற்றார்.

சுருவில்

## விண்ணக வாழ்வின் 4-வது ஆண்டு



மண்ணில்: 04-06-1919

விண்ணில்: 23-06-1985

அன்புத் தேவனே!

உமக்காக என்றுமே வாழ்ந்து உமதடிவந்த அருட்திரு J. B. பாக்கியநாதர் C.R. அடிகளாரை உமது விண்ணக மகிமையில் துலங்கச் செய்யும்.

தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக தோலகட்டி ஆச்சிரமம், யாழ் அருள் ஆச்சிரமம். கொச்சிக்கடை ஜெபமாலை ரஜனி சேவன ஆலயங்களில் 24-06-1989 சனிக்கிழமை காலை 6 மணிக்கு திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்பட்டன.

செபமாலைத்தாசர் மைந்தர்.

## 3-ம் ஆண்டு நிறைவு நினைவஞ்சலி



அருட்செல்வி பேணடேற் குலாஸ்

(திருச் சிலுவைக் கன்னிகை)

அர்ப்பணம்: 09-02-72

மண்ணில் மலர்வு: 06-09-48

விண்ணில் மகிழ்வு: 30-06-86

"நானோ நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையிலன்றி வேறெதிலும் ஒருகாலும் பெருமை பாராட்ட மாட்டேன். கலா 6:14.

இறைவா! உம்மில் மாத்திரம் ஆன்ம வாழ்வாகிய சாகாமையையும் இதய வாழ்வாகிய அளவு கடந்த அன்பையும் பெறத்தன் வாழ்வை அர்ப்பணித்து உம் இல்லத்திற்கு வந்திருக்கும் அடியாள் மேல் கருணை கூரும்.

அருட்சகோதரிக்காக இரங்கற்பலியில் 30-6-89ல் மன்றாடுவோம்.

பிரிவால் துயருறும்

பெற்றோர், சகோதரர்கள்

வங்காலை-10 உறவினர்.

## 2ஆம் வருட நினைவஞ்சலி



இராசநாயகம்

அன்ரனிதாஸ் அருளழகன்

தோற்றம்: 26-09-1964

மறைவு: 30-06-1987

எங்கள் குடும்ப ஒளியாய், அருளின் ஆன்மா, இறையருளமைதியில் நிலைக்க வேண்டும். ஈராண்டு நினைவுநாள் திருப்பலி 30-06-89 வெள்ளிக்கிழமை காலை 6-00 மணிக்கு இளவாலை, போயிட்டி ஊர்து அன்னை ஆலயத்தில் நிகழ்ந்தேறும். இந்நினைவஞ்சலித் திருப்பலியில் எம்மோடு பங்கு கொள்ள ஆவல்தோயும் உள்ளங்களோடு உறவினர் நண்பர்களைப் பணிவுடன் அழைக்கின்றோம்.

இராசநாயகம் குடும்பத்தினர்

போயிட்டி, இளவாலை.

## எவர் சில்வர் தயாரிப்புகள்

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவற்றிலும் பார்க்க தரமாகவும், மலிவாகவும் தயாரிக்கப்பட்ட Rajz Brand. தேவநற்கருணைப் பாத்திரம் (Ciborium), இரசப் பாத்திரம் (Chalice), தேவநற்கருணைத் தட்டு, காணிக்கைப் பை, பீட அலங்கார விளக்குகள், பூ ஏந்தனங்கள் தூண்டா மணி விளக்குகள், தேவநற்கருணைக் கூடு (Tabernacle) இன்னும் பற்பல காட்சியறை:

S. A. தெவசிகாமணி, ஆரோக்கிய இல்லம்...

# உங்களுக்குத் தெரியுமா? போட்டி 25

'பாதுகாவலன்' பத்திரிகையில் (இதழ் 18—இதழ் 22 வரை) வினாவுக்குரிய சரியான விடையைக் கண்டுபிடித்து வினா இலக்கத்தையும் விடையையும் தபால் அட்டையில் தெளிவாக எழுதி 25-7-89க்குமுன் பாதுகாவலன், அ. பெ. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். விடையும் பரிசு பெறுபவர்பெயரும் அடுத்த போட்டியும் 4-8-89 அன்று வெளிவரும்.

வினாக்கள்

1. அசீரியர்களின் தலைநகரான நினிவேயை பபிலோனியர்களும், மேதியர்களும் கூட்டாகச் சேர்த்து அழித்த வரலாற்றை எந்த ஆகமம் விவரமாகக் கூறுகின்றது? நினிவே நகரின் அழிவைக் கண்டு அகமகிழ்ந்த இறைவாக்கினர் யார்?

2. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனக் கலைஞரான இவர், சென்ற ஆண்டில் "ஞானார்த்த பிரதீபா" என்னும் கத்தோலிக்க வார ஏட்டின் சிறுகதைப் போட்டிப் பரிசைப் பெற்றுக் கொண்டார். இவர் பெயர் என்ன?

3. ஜப்பானில் பல பாகங்களிலும் பணிபுரியும் குருவானவர்களில் குவெபெக் சபையினரின் எண்ணிக்கை யாது?

4. இவ்வருடம் மே மாதம் 13ஆம் திகதி இருவரை முத்திப்பேறு பெற்றவர்களாக அனுமதிக்கும் அதிகாரபூர்வ பரிந்துரையைப் பரிசுத்த திருத்தந்தை அங்கீகரித்துள்ளார். அவ்விருவரின் பெயர்கள் யாவை?

5. தேம்பாவாணியிலுள்ள 36 படலங்களில் முதல் எத்தனை படலங்களைப் 'பாதுகாவலன்' கடந்த மாதம் முழுவதும் மரியாளை ஒரு தெய்வீகத் தலைவியாகப் (காவியத் தலைவியாக) பார்த்த பார்வையைப் பிரசுரித்தது?

6. வாழைநாரிலிருந்து தயாரிக்கப்படும் கைப்பணிப் பொருட்கள் எவை? அப்பொருட்களின் விற்பனை நிலையத்தை எங்கே அமைத்துள்ளனர்?

7. கேரள மாநிலத்தில், 1957இல் எந்த அரசு ஆட்சிக்கு வந்தது?

8. கந்தநாடு மறைவட்டத்தில் மலங்கரா மரபினர்க்கு எத்தனை ஆலயங்கள் உள்ளன?

போட்டி—24 இல் சரியான விடைகள்

(1) 1906-ம் ஆண்டு (2) நீர் கொழும்பு மாநகரசபை (3) திரு. கே. ஜே. ஜேசுதாஸ் (4) கருதினால் மைக்கல் மக்காய் கிற்புஞ்சு (5) 19-3-1989 இல் (6) பிரான்ஸ் தேசத்திலுள்ள றீம்ஸ் நகரிலே, 30-4-1651-ம் ஆண்டு பிறந்தார் (7) தேம்பாவணியில்.

போட்டி 24-இன் முடிவுகள் அடுத்த இதழில்

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. மரியாம்பிள்ளை பிரான்சிஸ்

மலர்வு:- 19-04-1910

உதிர்வு:- 10-07-1983

(பிரபல வர்த்தகரும், பெர்ணதேத் ருன்ஸ்போட் - முன்னூர், பிரான்சிஸ் என்ரப்றைசஸ் - கொழும்பு உரிமையாளரும்)

மாரியே மாறினாலும்
மாறிடா வாய்மையாளா!
வாரியே பாரிபோல
வழங்கிய நற்றயாளா!
சூரியனென சங்கு
சோதியாய் மிளிர்ந்தனையே!
கிரியன் உந்தனுக்காய்
சுதனை யாம் இறைஞ்சுகின்
றோம்.

எம் அன்புத் தந்தையின் நினைவுகூரல் திருப்பலி பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்திலும், பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்திலும் 10-07-1989 அன்று காலை 6-15க்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

அன்பு

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

"றோஸ் கொட்"
கடற்கரை வீதி,
பருத்தித்துறை.



இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

திரு. அலறயபிள்ளை

எமிலியாம்பிள்ளை

மலர்வு: 26-07-1914

உதிர்வு: 27-06-1987

அன்பான தந்தையே! இன்னல்கள் நிறைந்த இவ்வுலகிலிருந்து நீர் அழைத்துக் கொண்ட உம் அடியான் அலறம்பிள்ளை எமிலியாம்பிள்ளைக்கு முடிவில்லா இளைப்பாற்றியை அளித்தருளும். அருள் மிகுந்த உமது ஒளியில் அவரது ஆன்மாவை நிறைத்தருளும்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 7-07-1989 அன்று மாலை 5-30க்கு பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்

சென் தோமஸ்லேன் மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர்,
பருத்தித்துறை. பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர். A/137

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

## மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய திருவிழா

மானிப்பாய் பகுதியில் பக்த கோடிகளுக்கு கருணை மழை பொழிந்து நிற்கும் புனித அந்தோனியார் ஆலய பெருவிழா 18-06-89 அன்று கொண்டாடப்பட்டது. முதற் திருப்பலி 5-45 மணியளவில் பங்குத்தந்தை அருள்திரு. லூயிஸ் மொன்பொட் அடிகளால் நிறைவேற்றப்பட்டது.

காலை 7-15 மணியளவில் யாழ். ஆயர் பேரருள்திரு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலி இடம் பெற்றது. பின்னர் திருச் சொருபப்பவனி நடை பெற்றது. அதன் பின் புனித அந்தோனியாரின் செபம் ஆர்ப்பரிக்கப்பட்டு புனிதரின் ஆசீரும் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

தகவல்:-
அருளானந்தம் — நந்தினி
சிந்திப்பந்தல், இளவாலை

## தையற்கலை கண்காட்சியும் விற்பனையும்

சென்ற 10-06-89 சனியன்று வசாவிளான் புனித யாகப்பர் ஆலயத்தில் அப்பங்கு யுவதிகள் மன்றம் நடாத்திய தையற்கலைக்கண்காட்சியும் விற்பனையும் நடை பெற்றது. இது பங்குத்தந்தையின் முழு ஒத்துழைப்புடனும் கார்மேல் அன்பக அருள் செல்விகளின் அயராத சேவையுடனும் நிறைவேறியது. இக்கண்காட்சியை வைத்தியக் கலாநிதி செல்விதிலகம் அவர்கள் திறந்து வைத்து ஆரம்பித்தார். ஆரம்ப விழாவில் பங்குத்தந்தை ஆசிகூற, அருள் செல்விகள், யுவதிகள் மன்றக் கன்னியர் சமய வழிபாடு நடாத்திச் சிறப்பித்தார்கள்.

கடந்த 1986 - 1987-ம் ஆண்டுக்காலகட்டத்தில் மிகக் கூடுதலாகப் பாதிப்படைந்து ஊரைவிட்டு அகதிகளாக்கப்பட்ட மக்கள் திரும்பவும் தம் சொந்த ஊருக்கு வந்தும் வாழ்க்கை நடாத்த முடியாமல் இருந்த நேரத்தில் இளம் பெண்களை ஊக்குவிப்பதற்கும் அவர்கள் தளர்வுறுமல் தமது வாழ்க்கையைநடத்துவதற்கும் அத்தியாவசிய தொழில்களை செய்வதற்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்க எமது பங்குத்தந்தையும் கார்மேல் அன்பக கன்னியர்களும் பக்கபலமாக நின்று இத்தையற் கலைப் பயிற்சி அளிக்க முன்வந்தார்கள். இதற்கு உறுதுணையாக தையல் இயந்திரங்களை தந்து உதவிய மனித முன்னேற்ற நடுநிலைய அதிபர் அருள்திரு பயஸ் அடிகளாரின் பேருதவி என்றும் மறக்க முடியாதவை.

பங்குமக்கள்

## பாதுகாவலன் வளர நிதி.

| | | |
|---|---|---|
| 190 | சூ. தருமராசா, மண்டைதீவு ... ... | 35-00 |
| 191 | ச. எமிலியானுஸ் ,, ... ... | 25-00 |
| 192 | சே. சீமோன் ,, ... ... | 25-00 |
| 193 | பி. யோசேப்பு யேசுராசா ... ... | 25-00 |
| 194 | ம. ஆரோக்கியநாதர் ... ... | 25-00 |
| 195 | S. அகஸ்ரின் ஜேம்ஸ், பாழ்ப்பாணம் ... | 1000-00 |



## புங்குடுதீவு
## அருள்மிகு அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா

7-7-89 வெள்ளிக்கிழமை.
பிற்பகல் 4-30 மணி. கொடியேற்றம்.
சங்கற்பம் "குழந்தைகளுக்கான நல்வாழ்வு"
வழிபாடு— மறையுரை, திருப்பலிப்பூசை.

8-7-89 சனிக்கிழமை.
சங்கற்பம் "மனித வாழ்வில் ஒப்புரவு."
பி. பகல்: 5—30, கூட்டுவழிபாடு, பஜனை.
திருப்பலி, நற்கருணை ஆராதனை.

9-7-89 ஞாயிற்றுக்கிழமை:
சங்கற்பம்: புதுவாழ்வுக்கு ஆன்மீக பலம்"
காலை 8-00 மணி. திருவிழா பூசைப்பலி, நற்கருணைத்திருவிருந்து.
காலை 9-00 மணி. அருள்மிகு அந்தோனியார் தேர்ப்பவனி.
"மதபேதமின்றி அனைவரும் இப்புனித தலத்தில் கூடி தனிப்பட்ட கருத்துக்காகவும், நாட்டின் அமைதிக்காகவும் புனிதரிடம் வேண்டுவோமாக"

அருள்மிகு அந்தோனியார் ஆலயம்
புங்குடுதீவு

பங்குத் தந்தையும்
ஆலய நிர்வாகக் குழுவும்

A/138

## மறைவாழ்வுக் கல்விப்பணியின் இருமாத இதழ் "மன்னு"

மன்னார் மறைவட்ட மறைவாழ்வுக் கல்விப் பணியாளர் சங்கத்தின் விழா வைகாசி 21, 22ல்பெருவிழாவாகக்கொண்டாடப்பட்டது. மறைவட்ட பங்குகள் பதினெட்டிலும் இருந்து 80 க்கு மேற்பட்ட மறையாசிரியர்கள் வருகைதந்திருந்தனர். விழாவின் ஆரம்பமாக பக்திமிகு பஜனைகளும், உள்ளம் உருகும் வேண்டுதல்களும், நன்றி, புகழ்ச்சிகளும் ஆன்மீக தாகத்தைத் தணித்தன.

விழாவின் சிறப்பு அம்சமாக அருள்திரு. ஸ்ரனி அன்ரனி (அ. ம. தி.) அடிகளாரின் "ஆன்மீக வளர்ச்சியும் உளவியலும்" என்ற உரையில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஆளுமை உண்டு. அவ்வாளுமை இறைவனில் வளர்க்கப்பட வேண்டும் என்ற தத்துவப் பொருள் சாராம்சமாக இருந்ததுடன் ஆசிரியர்களின் சிந்தனையையும் தட்டியெழுப்பியது.

தலைவர் திருவாளர். எஸ். எஸ். பீரிஸ் அவர்கள் பணியாளர்களையும்; திருமறைப்பணி நிலையத்தின் புதிய இயக்குநர் அருள்திரு. நோபேட் அடிகளாரையும் வரவேற்று, இயக்குநரை அங்கத்தவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்ததோடு பொதுக் கூட்டத்தையும் ஆரம்பித்து வைத்தார். இயக்குநர் அவர்களால் அறிவுரை புகட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து சென்ற வருட அறிக்கையும், செயல் அறிக்கையும் வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. புதிய செயற்குழு உறுப்பினர்கள் தெரிவில் திருவாளர் எஸ். எஸ். பீரிஸ் (இளைப்பாறிய அதிபர்) அவர்களே மீண்டும் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். முக்கியமான சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. 1. மறைவாழ்வுக் கல்விப் பணியாளர்களுக்கான ஆண்டுத் தியானம் மடுத் திருப்பதியில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்படல். 2. இருமாதத்திற்கு ஒரு இதழாக வெளிவந்த 'மன்னு' தடைநீங்கி மீண்டும் ஆண்டுக்கு இரண்டு இதழ்களாக வெளியிடப்படல்.

இராவிருந்துக்குப்பின் பங்கு ரீதியில் ஒழுங்கு செய்யப்பட்ட கலை நிகழ்ச்சிகள் மெருகூட்டின.

கண்டி மறைவட்டம் ......
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் பெங்களூர் புனித அல்போன்ஸியார் குருத்துவக் கல்லூரியில் மெய்யியலையும், கண்டி தேசிய குருமடத்தில் இறையியலையும் கற்றுத் திருத்தொண்டராக (தியாக்கோன்) மஸ்கெலியா, வஹக்கோட்டை ஆகிய பங்குகளில் வாழும் மக்களுக்கு மறைப்பணி புரிந்து தனது குருத்துவ வாழ்க்கைக்குத் தேவையான பயிற்சி பெற்றார்.

நிகழும் 1989-ம் ஆண்டு ஆவணித் திங்கள் 6-ம் நாள் ஞாயிற்றுக் கிழமை காலை 9-30 மணிக்கு நுவரெலியா புனித சவேரியார் ஆலயத்தில் இவர் தனது முதற் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்.

குருத்துவத் ...
(1ஆம் பக்கத் தொார்ச்சி)

தனது ஆரம்பக் கல்வியைப் பயின்றார், பின்னர் மாறவிலை-புனித சின்னப்பர் சிறிய குருமடத்தில் சேர்ந்து சிலாபம்-புனித பெர்னதெத்தம்மாள் தமிழ் வித்தியாலயத்தில் தொடர்ந்து கல்வி பயின்றார். அதனைத்தொடர்ந்து களுத்துறை "தகாம் செவன" இல் இடைக்காலக் குருமடத்தில் பயிற்சி பெற்றார். 1983 ஆம் ஆண்டு கண்டி தேசிய குருமடம் சென்று இரண்டு வருட மெய்யியல் கல்வியையும் நான்கு வருட இறையியல் கல்வியையும் முடித்துத் தேர்ச்சி பெற்றார்.

இவர் திருப்பணியாளராக (தியாக்கோன்) வென்னப்புவ, புத்தளம் ஆகிய பங்குகளில் பணிபுரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆயர்கள் பயணம்

இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் ஜுலை 7—8 திகதிகளில் திருத்தந்தையை உரோமாபுரியில் சந்திப்பதற்காக சென்று கொண்டிருக்கிறார்கள். ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை திருத்தந்தையைச் சந்திக்க வேண்டிய கடமையை நிறைவேற்றவே இலங்கைக் கத். ஆயர்கள் இப்பயணத்தை மேற்கொள்கின்றனர்.

திருநிலைப் ...
(1 ஆம் பக்கம்தொடர்ச்சி)

க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் தேறினார்.

களுத்துறை இடைநிலைக் குருமடத்தில் ஓராண்டு குருத்துவப் பயிற்சிக்கான புகுமுகக் கல்வியைக்கற்ற பின்னர், 1983 ஆம் ஆண்டு கண்டி தேசியக் குருத்துவக் கல்லூரியில் காலடி எடுத்துவைத்தார். மெய்யியல், இறையியல், கற்றதோடு இறைவனுக்கும் மக்களுக்கும், தம்மை முழுமையாக அர்ப்பணிக்கப்பயிற்சியும் பெற்றார். திருத் தொண்டராக்கப்பட்டபின், களனி தலுகமையிலும் ஜா எலை கனுவனையிலும் தமது மேய்ப்புப் பணிக்களப் பயிற்சியை இனிதே நிறைவேற்றினார்.

இவர் தமது முதற் சிறப்புப் பலியை 23-7-1989 பி. ப. 5.00 மணிக்கு நீர்கொழும்பு குடாப்பாட்டில் அமைந்துள்ள புனித செபமாலை அன்னை ஆலயத்தில் நன்றியுணர்வோடு ஒப்புக் கொடுப்பார்.

### அடுத்த இதழ்

தபால் சீர்கேடு காரணமாக எமது அடுத்த இதழை காலதாமதமாகவே வெளியிடவுள்ளோம். அடுத்த இதழ் ஜுலை 14 ஆம் திகதி வெளிவரும் என்பதை அறியத்தருகிறோம்.

### ஊக்குவிப்பு

இவ்வாரம் 6915 பாதுகாவலன் பிரதிகள் அச்சிடப்படுகின்றன. உங்கள் பங்கில் ஊக்குவிப்பு நடக்கின்றதா?

## பராமரிப்பு நிலையம்

வீதிகளில் கவனிப்பாரற்று போதைப் பொருளுக்கும், விபசாரத்துக்கும், அசுத்தத்துக்கும் உட்பட்டு தமது வாழ்வைப் பாழாக்கிக் கொண்டிருக்கும் சிறுவர்களை பன்சாய் யாய் என்னும் நிறுவனம் வரவேற்கின்றது. தாய்லாந்தில் கத்தோலிக்க இளைஞர் சங்கம் இந்நிறுவனத்தை ஆதரித்துவருகின்றது.

கல்வி கற்க விரும்புவோருக்கு எழுதப்படிக்கக் கற்றுக் கொடுத்து தொழில் கற்கும் வாய்ப்பை இது அளிக்கின்றது. சுகாதாரம், விளையாட்டு, அழகியல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட பல பயிற்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தாம் நேர்மையாக உழைக்க வேண்டும்; களவெடுக்கவோ, பிச்சையெடுக்கவோ, வேறு தவறான வழிகளில் பணம் தேடவோ கூடாது என்பதைப் பிள்ளைகளுக்கு உணர்த்துவதற்காக, அவர்களது சித்திரங்களை நிறுவனத்துக்கு "விற்று" பழங்கள், தின்பண்டங்கள் ஆகியவற்றை பெற்றுக் கொள்ள வழி செய்யப்படுகிறது.

கூடுமானபோது பிள்ளையை அதன் குடும்பத்தில் சேர்த்து அதன் நலனைக் கவனித்து வருகின்றது. இல்லத்திலிருந்து வேறு பாடசாலைகளுக்கும் பிற இடங்களுக்கும் சென்றவர்களோடும் தொடர்பு வைத்துக் கொள்ளப்படுகிறது.

## புனித செபஸ்தியார் ஆலய திருவிழா
### உதயபுரம், யாழ்நகர்

ஆடி 5-ம் திகதி புதன் மாலை 5 மணி—கொடியேற்றம். இளைஞர் தினம்.
,, 6-ம் திகதி வியாழன் மாலை 5 மணி. செபமாலையும், திருப்பலியும். பெற்றோர் தினம்.
,, 7-ம் திகதி வெள்ளி மாலை 5 மணி. செபமாலையும் திருப்பலியும் நற்கருணை விழாவும்.
,, 8-ம் திகதி சனி. காலை 7 மணி. திருநாள் திருப்பலியும், திருச்சுருப பவனியும், ஆசீரும்,

பங்குத் தந்தை
பாஷையூர்.

A/141

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு யூன் மாதம் 30ஆந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
பதிவு இல: QB/ 1001/ 58/61

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org